ISSN 2279-3607

# கூர்மை

## பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை

பொருளியல் துறை,
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

**Advisor**

Head, Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editor**

Ms. G. Kajenthini
Lecturer (Probationary),
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editorial Team**

Mr. A. Soundaralingam
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Dr. T. Bhavan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. S. Maheswaranathan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mr. K. Pushpakaran
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. J. Suresh,
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

***Coormai***

***Issue: 02***

***2020***

***Publisher***

***Department of Economics,
Faculty of Commerce and
Management,
Eastern University,
Sri Lanka***

***T. No: 065 2240735***

***E-mail:editorcoormai@gmail.com***



**Team of Reviewers**

| | |
|---|---|
| Dr. S. Jeyarajah | Economics |
| Mr. A. Soundaralingam | Economics |
| Dr. T. Bhavan | Economics |
| Mrs. S. Maheswaranathan | Economics |
| Mr. K. Pushpakaran | Economics |
| Mrs. J. Suresh | Economics |
| Prof. V. Kanagasingam | Management |
| Dr. A. Andrew | Management |
| Dr. T. Prabaharan | Management |
| Mrs. V. R. Ragel | Management |
| Dr. A. Anton Arulrajah | Management |
| Mrs. F. B. Kennedy | Management |
| Mrs. L. D. Victor | Management |
| Mrs. D. Thavakumar | Management |
| Dr. J. Sutha | Management |
| Mr. R. Uthayakumar | Commerce |
| Mrs. S. Sritharan | Commerce |
| Dr. S. Balendran | Commerce |
| Mr. T. Paranthaman | Commerce |
| Dr. N. Rajeshwaran | Commerce |

## வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது நீண்டகாலமாக கூர்மை எனும் பொருளியல் செய்தி ஏட்டினை வெளியிட்டு வருவது யாவரும் அறிந்ததே. பொருளியல் பாடத்தினை பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களும், பொருளியல் பாடத்தினை விசேட கற்கை நெறியாக பயிலும் மாணவர்களும் மற்றும் பொருளியலில் ஆர்வமுடையோரும் அவ் வெளியீட்டின் மூலம் நிறைந்த பயனைப் பெற்றுள்ளனர். பொருளியல் துறையின் சமூகம்சார் செயற்பாடுகளின் ஓர் சிறிய முயற்சியாக கூர்மை வெயிளியிடப்பட்டு வருகின்றது. ஆரம்ப இதழ்கள் கையெழுத்து மற்றும் தட்டெழுத்து மூலமாக வெளியிடப்பட்ட இச் செய்தியேடு கடந்த வருடம் தொடக்கம் ஒரு பொருளியல் ஆண்டுச் சஞ்சிகையாக வெளியிடப்படுவதை இட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பொருளியல் சஞ்சிகையானது பொருளியல், முகாமைத்துவம், வணிகம் மற்றும் பொதுவிடயங்கள் தொடர்பான உள்ளடக்கங்களை தாங்கி வெளிவரவுள்ளது. காலத் தேவைக்குகந்த பொருளியல் கட்டுரைகளையும் பொருளியல்சார் அம்சங்களையும் பொருளியல் வல்லுனர்களிடமிருந்து பெற்று இச்சஞ்சிகை வெளிக் கொணரும் பொருளாதார விடயங்களை அறிந்து கொள்வதில் பலரும் ஆர்வமாகவுள்ளனர். பொருளியல் கோட்பாட்டு அம்சங்கள் மாணவர்களுக்கு அவசியமாகிலும் நடைமுறைப் பொருளாதார கருத்துக்களையும் விடயங்களையும் தெரியப்படுத்துவதும் நன்றாகும். எனவே, இச்சஞ்சிகை பலருக்கும் பயனளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

வெளியீடுகளுக்கான நிதித்தடைகளை கருத்திற் கொண்டு இச்சஞ்சிகை நிகழ்நிலை வெளியீடாக வெளியிடப்படுகின்றது. இதன் முழுமையான பிரசவிப்புக்கு கைகொடுத்த அனைவருக்கும் வாழத்துக்களை தெரிவிக்கின்றேன். குறிப்பாக இச்சஞ்சிகையின் ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள். இதன் தொடர்ச்சிக்கு உங்கள் கருத்துக்களையும், வகிபங்கினையும் தொடந்து வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

கலாநிதி ச. ஜெயராஜா

பீடாதிபதி

வணிக முகாமைத்துவ பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் முன்மாதிரி அங்கமாகத் திகழும் பல்கலைக்கழகங்கள் வெறுமனே கற்றல் நடவடிக்கையுடன் மட்டுமல்லாது தாம் கற்றவற்றையும் கேட்டவற்றையும் உலக சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு ஊடகமாகத் திகழ்கின்றது.

அந்தவகையில் எமது வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் மட்டுமல்லாது புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் தனது அதீத கவனத்தை ஈர்த்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 1992 ஆம் ஆண்டிலிருந்து 'கூர்மை' செய்தியேடானது தனது இருபத்தி ஏழு இதழ்களை கிரமமாக வெளியிட்டுள்ளது. இதன் ஒரு பரிணாமமாக கூர்மை இதழானது சமானர்களின் மதிப்புரையுடன் (Peer Review) கூடிய செய்தியேடானது வருடாந்த சஞ்சிகையாக தான் வளர்ந்து வரும் பாதையில் நிலைத்து நிற்கும் போக்கை எட்டியுள்ளது.

இச் சஞ்சிகையானது பொருளியல் துறைசார் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுப்பரீட்சையினை எதிர் கொள்வோருக்குத் தேவையான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைப் பொருளியல் அறிவினை வழங்குவதில் தன்னார்வத்துடன் பங்களிப்புச் செய்துவருகின்றது. அந்தவகையில் சமூதாய நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகைக்குப் பங்களிப்புச் செய்துவரும் எமது விரிவுரையாளர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தலைவர்,

பொருளியல் துறை

வணிக முகாமைத்துவ பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**கூர்மையின் வாசகர்களே..**

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கற்கையை நோக்காகக் கொண்டு, கட்டுரைகள், எண்ணக்கரு விளக்கங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் உள்ளிட்ட பல விடயங்களை தாங்கிய கூர்மை (செய்தி ஏடு) ஆக வெளிவந்து, இருபத்து ஏழு சிறப்பு இதழ்களை வெளியிட்டுள்ளதில் எமது பொருளியல் திணைக்களம் சார்பாக மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாண்டு கூர்மை திறனாய்வுடன் கூடிய வருடாந்த சஞ்சிகையாக பொருளியல், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக துறைசார் சிறப்புக் கட்டுரைகளைத் உள்ளடக்கி வெளிவருகின்றது. மேலும் மாணவர் பக்கம், புள்ளிவிபர இணைப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறு பொருளியல்சார் அம்சங்களையும் சேகரித்து நிகழ்நிலை வெளியீடாக இச்சஞ்சிகை வெளிக்கொணர்கின்றது. கூர்மை இத்துறைசார் மாணவர்களுக்கு மாத்திரமின்றி ஆசிரியர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இதுவரை காலமும் கூர்மை செய்தி ஏடு இருபத்து ஏழு இதழ்களை கடந்து கிரமமாக வெளிவருவதற்கு பங்களித்த அனைத்து நபர்களுக்கும், வாசகர்களாகிய உங்களிற்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் கூர்மையானது ஆண்டு சஞ்சிகையாக வெளிவருவதற்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து தங்கள் ஆதரவினை வேண்டிநிற்பதுடன், இச்சஞ்சிகை பற்றிய தங்களின் மேலான கண்ணோட்டத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர்,

கூர்மை

வணிக முகாமைத்துவ பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

CONTENTS

உலகமயமாக்கலில் கொவிட் - 19 இன் தாக்கம் ........ 1

அரச பொதுச்செலவு ........ 21

ஜிக் பொருளாதாரம் பற்றிய ஒரு கண்ணோட்டம் ........ 40

சர்வதேச வர்த்தகம் ........ 48

முழு வருமானக் கருதுகோள் ........ 62

இணைப்பு 01: பொருளியலாளர் ........ 73

எஸ்தர் டஃப்லொ ........ 73

இணைப்பு 02: புள்ளிவிபர இணைப்புக்கள் ........ 75

ஒழுங்குமுறை தரச் சுட்டி ........ 78

குரல் மற்றும் பொறுப்புக்கூறல் சுட்டி ........ 79

அரசியல் ஸ்திரத்தன்மை சுட்டி ........ 80

ஊழல் உணர்வுகள் சுட்டி ........ 81

அரசியல் உரிமைகள் சுட்டி ........ 82

சிவில் சுதந்திரச் சுட்டி ........ 83

நாடாளுமன்றத்தில் பெண்கள் விகிதம் ........ 84

# உலகமயமாக்கலில் கொவிட் - 19 இன் தாக்கம்

பா. யனுதாஞ்சலி[1] மற்றும் திருமதி.எஸ். மகேஸ்வரநாதன்[2]

## அறிமுகம்

உலகமயமாக்கல் என்பது தங்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒன்றாக இணைந்திருத்தலாகும். இவ் உலகமயமாதல் என்னும் பதமானது பேராசிரியர் டேவிட் என்பவர் மூலமாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுவாக நாடுகளின் பணிகள், பண்டங்கள், மூலதனம், உழைப்பு, தொழில்நுட்பம், மனித மூலதனம் போன்றவற்றின் மீது எவ்வித தடையும் ஏற்படாது உலகின் பல்வேறு ஆதாரங்களை ஒன்றாக இணைக்கும் ஒரு செயன்முறை உலகமயமாக்கலாகும். உலகமயமாக்கலின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குரிய சர்வதேச சந்தைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. அதாவது உலகமயமாதல் என்பது புறக்காரணிகளால் தூண்டப்பட்டு ஒரு நாட்டில் ஏற்படும் மாற்றங்களை குறிக்கின்றது. இம்மாற்றங்கள் கடந்த காலங்களிலிருந்து பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அடிப்படையில் உலகெங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வகையில் நாடுகளிடையே தொடர்பாடல், வர்த்தகம், முதலீடு என்பன குறித்து கூடிய தொடர்புகளையும் ஒருங்கிணைப்புக்களையும் ஏற்படுத்துதல் உலகமயமாக்கலாகக் காணப்படுகின்றது. அடிப்படையில் சர்வதேசமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறையை உலகமயமாக்கலானது குறித்து நிற்பதோடு தற்போது பொருளாதார, சமூக, கலாசார, அரசியல், சார்ந்த உலகமயமாதலாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

[1] உதவி விரிவுரையாளர், பொருளியல் கற்கைகள் அலகு, கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

[2] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

உலகமயமாக்கல் மூலமாக அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் சாதகமான விளைவுகளையும் பாதகமான விளைவுகளையும் எதிர்கொள்கின்றன. உலகமயமாக்கலின் விளைவால் தோன்றிய கொவிட் - 19 வைரசானது இன்று உலகளாவிய ரீதியில் எதிர்பாராத பாரியளவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ் கொவிட் - 19 வைரசானது 2019 டிசம்பரில் சீன நாட்டின் வூபோய் மாகாணத்தின் தலைநகராக விளங்கும் வூகானில் முதன் முதலாக அடையாளம் காணப்பட்டு பின்னர் படிப்படியாக உலக நாடுகளையும் பற்றிக் கொண்டது. இதன்படி ஜனவரி 30 அன்று கொவிட் - 19 தொற்றை உலகளாவிய ரீதியிலான பொது சுகாதார அவசர நிலையாகவும் மார்ச் 11 அன்று ஒரு பெருந்தொற்றாகவும் உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. ஆகஸ்ட் 31 2020 இன் நிலவரப்படி 216 நாடுகளில் கொவிட் - 19 வைரஸின் தாக்கம் காரணமாக 24,854,140 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 838,924 பேர் உயிரிழந்துள்ளனர். இலங்கையை பொறுத்தவரையில் 31.08.2020 இன் அரச தரவின்படி 2,995 பேர் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டதோடு அதில் 2,860 மக்கள் குணமடைந்துள்ளனர். 12 பேர் உயிரிழந்துள்ளனர். உலகளாவிய ரீதியில் அமெரிக்காவில் 5,855,521 பேர் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 838,924 பேர் உயிரிழந்துள்ளனர். உலகில் கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதலாவது இடத்தில் காணப்படுகின்றது.

உலகையே ஆக்கிரமித்து காணப்படும் கொவிட் - 19 வைரசானது உலக நாடுகளுக்கு இன்றைய நிலையில் மிகப் பெரியதொரு சவாலாகக் காணப்படுகின்றது. குறிப்பாக உலகமயமாக்கலில் பாரியளவான தாக்கத்தை கொவிட் - 19 வைரசானது ஏற்படுத்தியுள்ளது. உலகமயமாக்கலால் நன்மை மட்டுமல்ல மாறாக ஆபத்துக்கள் மற்றும் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. இக் கொவிட் - 19 இன் வைரசினால் உலகமயமாக்கலில் ஏற்படும் தாக்கத்தை பொருளாதார தாக்கம், சமூக மற்றும் சூழலியல் ரீதியான தாக்கம் என வகைப்படுத்தி நோக்க முடியும்.

## கொவிட் - 19 மற்றும் பொருளாதார உலகமயமாக்கல்

வேலையினை இழத்தல் என்பது பொருளாதார உலகமயமாக்கலில் ஏற்பட்ட உடனடித் தாக்கமாகும். அதாவது கொவிட் - 19 நோய்த்தொற்றுக்களின் அதிவேக உயர்வுக்கு பதிலளிக்கும் விதமாக பிராந்தியங்களில் காணப்படும் பல நாடுகள் பயணக் கட்டுப்பாடுகள் சமூக இடைவெளி பேணல், முடக்குதல் (Lockdown), பாடசாலைகள், கல்வி, நிலையங்கள், தொழிற்சாலைகள், தொழில் புரியும் இடங்களை மூடும் நிலை ஏற்பட்டுள்ளதனால் தொழில் தரு நிறுவனங்களும் தொழிலாளர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளாவிய ரீதியில் கட்டாயமாக முடக்குதல் (Lockdown) செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நாடுகளில் சுமார் 81% வேலையாட்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அறிமுகப்படுத்திய மாதிரியின் அடிப்படையில் உலகெங்கிலுமுள்ள தொழிலாளர்கள் வேலை செய்யும் நேரம் தற்போது 10.5% மாக குறைவடைந்துள்ளது. இது 2ம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மிக மோசமான நிலையென இவ் அமைப்பானது விபரிக்கின்றது. 2008, 2009 காலப்பகுதியில் ஏற்பட்ட நிதி நெருக்கடியை விட இது மோசமானது எனவும் கூறுகின்றனர். உண்மையிலேயே வேலையிழப்பு என்பது வருமான இழைப்பையும் அவர்களது குடும்பங்களையும் மோசமான வறுமை நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒன்றாகும். குறிப்பாக வேலையின்மை என்பன வறுமை, பசி (உணவுத்தட்டுப்பாடு), தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய பணம் போதாமை, மன உழைச்சல், கடன்சுமை, மருத்துவத்திற்கு கூட போதியளவு பணம் இல்லாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக ஏப்ரல் மாத இறுதியில் 6.5 மில்லியன் வேலையாட்கள் உணவங்கள், ஹோட்டல்களில் வேலையினை இழந்தனர். சில்லறை விற்பனையாளர்கள் 1.7 மில்லியன் பேர் தமது தொழிலினை இழந்தனர். குறிப்பாக அமெரிக்க ஊழிய சந்தையில் மார்ச் மாதத்தில் 14.6 மில்லியன் பேரும் ஏப்ரல் மாதத்தில் கிட்டத்தட்ட பத்து மில்லியன் ஊழியர்களும் தமது தொழில்வாய்ப்பினை இழந்தனர். இதனால் அமெரிக்காவில்

வேலையின்மை வீதம் அதிகரித்தது. குறிப்பாக பெப்ரவரி தொடக்கம் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியிலேயே 24.7 மில்லியன் மக்கள் வேலையிழந்தனர் (BBC, 2020). ஆனால் 2008 ஆம் ஆண்டு நிதி நெருக்கடியின் போது 8 மில்லியன் மக்களே வேலையினை இழந்தனர். இதன்படி கொவிட் - 19 ஏனைய காலப்பகுதிகளை விட அதிகமாகவும் பாரியளவிலும் வேலைவாய்ப்பை குறைத்துள்ளது. குறிப்பாக சொந்த நாட்டில் வாழ்பவர்களை விட புலம்பெயர் தொழிலாளர்களை கொவிட் - 19 ஆனது அதிகளவில் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது (NCSL, 2020). இவை அனைத்தும் பொதுவானதொரு மதிப்பீடாகும். ஆனால் அன்றாட கூலிக்கு வேலை செய்யும் பல மில்லியன் மக்கள் தமது தொழிலை முடக்குதல் (Lockdown) மூலமாக இழந்துள்ளனர். தமது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தக் கூட முடியாதளவிற்கு பசி, நோய் தொற்று, மன உளைச்சலில் காணப்படுகின்றனர். வேலையின்மை மூலமாக தனிநபர் வருமானம் குறைவடைந்து அதன் விளைவாக சேமிப்பு, முதலீடு குறைவடைந்து அதன் விளைவாக தனிநபரதும் நாட்டினதும் பொருளாதார வளர்சியானது பாதிக்கப்படுகின்றமை மறுக்கமுடியாத ஒன்றாகும். இதன்படி வேலையிழப்பு என்பது பொருளாதார உலகமயமாக்கலில் கொவிட் - 19 இனின் தாக்கமாக கொள்ளப்படும் அதேவேளை வேலையின்மையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இது மேலும் ஒரு சுமையாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

## கொவிட் -19 மற்றும் சுற்றுலாத்துறை

கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட முக்கிய துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. அதாவது கொவிட் - 19 தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக உலக நாடுகள் நாட்டினை முடக்குதல் (Lockdown), சர்வதேச ரீதியான விமான பயணங்களை இரத்து செய்தல், விமான நிலையங்களை மூடுதல், பயணக்கட்டுப்பாடுகளை விதித்தல், எல்லைகளை மூடுதல், கடல்வழி, வான்வழி போக்குவரத்துக்களை தவிர்த்தல் போன்ற பல கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளன. இதன் நேரடி விளைவாக பாதிக்கப்பட்ட முதல் தர துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. சுற்றலாத் துறையானது

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சமூக பொருளாதாரத்துக்கான அடிப்படை அம்சமாக காணப்படும் அதேவேளை பல நாடுகளில் 30% - 80% வரையிலான ஏற்றுமதியில் சுற்றுலாத்துறையின் பங்கு காணப்படுகின்றது. ஆனால் கொவிட் - 19 2020 ஜனவரி - ஏப்ரல் மாதங்களிலே சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை 47% இனால் குறைவடைந்துள்ளதோடு வேலையிழப்பு, அந்நிய செலாவணி மற்றும் வரி வருமானங்களை இழக்கும் நிலைக்கு இன்றைய நாடுகள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது பெப்ரவரியில் 12% மாகவும் மார்ச்சில் 55% மாகவும் ஏப்ரலில் 97 வீதமாகவும் குறைவடைந்து சென்றுள்ளது. குறிப்பாக சுற்றுலாப்பயணிகள் தத்தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்வதன் மூலம் பொருளாதார உலகமயமாக்கலானது பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக இலங்கையை நோக்கினால் இலங்கை வரலாற்றில் 2020 ஏப்ரல் பூச்சிய உல்லாச பயணிகள் வருகை தந்த வருடமாக காணப்படுவதோடு இவ் வீழ்ச்சி பல்வேறு வகையில் இலங்கையின் பொருளாதாரத்தை பாதித்தது. அந்தவகையில் சுற்றுலாத்துறை என்பது ஒரு நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தந்த ஒரு துறையாகும். அவ் வருமானமானது கொவிட் - 19 இனால் குறைவடைந்துள்ளது. அதாவது இலங்கைக்கு மொத்த வெளிநாட்டு ஏற்றுமதி மூலம் 2018 ஆம் ஆண்டில் 11 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமானது கிடைக்கப்பெற்றது. அதே ஆண்டில் இறக்குமதியினளவானது ஏறத்தாழ 22.5 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது. இறக்குமதிக்கு செலவு செய்யப்பட்ட 11.5 பில்லியன் அமெரிக்க டொலர்களும் உல்லாசப் பயணத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலமாகவே ஈடுசெய்யப்பட்டது (Economynext, 2020). ஆனால் தற்போது கொரோனா தொற்று காரணமாக சென்மதிநிலுவையின் நடைமுறைக் கணக்கின் பற்றாக் குறையானது மென்மேலும் அதிகரிக்க கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இந்த இழப்பை ஈடுசெய்வதற்கு நாட்டில் சாதாரண நிலை தோன்ற வேண்டியது அவசியமானதொன்றாகும். சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தமையானது மறைமுகமாக வேலைவாய்ப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார உலகமயமாக்கலுக்கும்

அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. அதாவது உல்லாசப்பயணத்துறையால் உலகளாவிய ரீதியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர் வேலைவாய்ப்பினை பெற்றிருந்தனர். குறிப்பாக இலங்கையில் ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் சுற்றுலாத்துறை மூலமாக வேலைவாய்ப்பினை பெறுகின்றனர். கொவிட் - 19 இனால் நான்கு இலட்சம் இலங்கையர்கள் கடந்த நான்கு மாதங்களாக முற்றாக வேலையிழந்துள்ளனர். இதனால் தனிநபர் வருமானம் குறைவடைவதோடு, அவர்களுக்கு நிவாரண உதவி செய்ய வேண்டும், எதிர்காலத்தில் சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப வேண்டும் என நாட்டினது அரச சுமையானது பல வழிகளிலும் அதிகரித்துள்ளது. மேலும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு நிலுவையில் பாரிய பற்றாக்குறையை உருவாக்கி இறுதியாக மூலதனக் கணக்கூடாக சென்மதிநிலுவையில் மூலதனப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உலக நாடுகளிலும், உலக நிதி நிறுவனங்களிலும் கடன்பெற வேண்டிய நிலையை தோற்றுவிக்கின்றது. ஏற்கனவே இலங்கை உட்பட பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கடன் சுமையால் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவ்வாறு இருக்கையில் கொவிட் - 19 இனால் நாடுகளில் மென்மேலும் கடன்சுமை அதிகரித்துள்ளது. இவ்வாறு கொவிட் - 19 இன் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி, கடன் சுமை என்பன அதிகரித்து அதன் விளைவாக நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு இலங்கையை நிதி நெருக்கடிக்குள் இட்டுச்செல்கின்றது. அதேபோல் இலங்கையில் கொவிட் - 19 இனால் ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதிகள், உல்லாசப்பயணிகளின் வருகை வெளிநாட்டு பண அனுப்புதல்களின் அதிகரிப்பு, வெளிநாட்டு அதிகரிப்பு, வெளிநாட்டு நேரடி முதலீடு என்பன அதிகரிக்கும் போது அந்நியச் செலாவணிகள் உட்பாய்ச்சல்கள் அதிகரித்து ரூபாவின் புற பெறுமதி அதிகரிக்கும். மாறாக கொவிட் - 19 இனால் இது பாதிக்கப்பட்டுள்ளதால் இவையனைத்தும் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக இலங்கையின் ரூபா பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

## கொவிட் - 19 மற்றும் நிதிச்சந்தைகள்

அடுத்து கொவிட் - 19 வைரஸ் காரணமாக நிதிச்சந்தைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதனை எம்மால் அவதானிக்க

முடிகின்றது. உலக ஓய்வூதிய கவுன்ஸிலின் இயக்குனரும் உலக வங்கி உலகளாவிய உட்கட்டமைப்பு வசதியின் ஆலோசனைக்குழு உறுப்பினருமான எம். நிக்கோல பிர்ஸ்லி தற்போது உலகளாவிய ரீதியில் நிகழ்வது பெரும் நிதி நெருக்கடி எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது மேற்கோளிற்கு அமைவாக நிதிச்சந்தைகளின் வீழ்ச்சி கொவிட் - 19 இனால் ஏற்பட்ட குறுகிய கால நீண்ட காலத்தாக்கமாக விளங்குகின்றது. அதாவது நிதிச்சந்தைகளில் பங்கு, பிணைகள் மற்றும் பொருட்சந்தை (எண்ணெய், தங்கம்) களில் பாரியளவில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக OPEC ஒப்பந்தம் தோல்வியடைந்ததால் எண்ணெய்களின் விலைகள் குறைவடைந்ததன் விளைவாக பங்கு சந்தை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கொவிட் - 19 காரணமாக ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் கட்டாய குறுகிய கால விற்பனைத்தடையை விதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்நாடுகள் மிகவும் பலவீனமான ஓய்வூதிய சொத்து தளங்களைக் கொண்டுள்ளதோடு இவர்களது ஒன்றிணைந்த ஓய்வூதிய செல்வம் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற அதிகார வரம்புகளை விட 15 மடங்கு சிறியதாகும். கடுமையான நெருக்கடி காலங்களில் நிதிச்சந்தையில் வர்த்தகம் செய்யயப்படும் பத்திரங்கள் மற்றும் பங்குகளுக்கான இறுதி முயற்சியில் பணக்கார உள்நாட்டு கொள்வனவாளர்கள் இல்லை. இதன் விளைவாக அவர்களது தேசிய பொருளாதாரம் பாதிக்கப்படுவதோடு அவர்களது அரசியல் இறையாண்மையும் பாதிக்கப்படுகின்றது. பங்குச்சந்தைகளைப் பொறுத்தவரையில் பெப்ரவரி 24 Dow Jones பங்குச்சந்தையானது சராசரியாக (Financial Times Stock Exchange) 5% ஆக வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் பெஞ்மார்க் (Benchmark) குறியீடுகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. அதேவேளை பெப்ரவரி - 27இல் அமெரிக்க பங்குச்சந்தைகளில் NasDaq - 100, S & P 500, Dow Jones industrial என்பன பெருமளவில் பாதிக்கப்பட்டன குறிப்பாக Dow Jones ஆனது 1191 புள்ளிகள் வீழ்ச்சியடைந்தது மிகப்பெரிய சரிவை பதிவு செய்தது. மேலும் மார்ச் 9இல் S & P 500 பங்கு சந்தை பரிமாற்ற நடவடிக்கையை ஆரம்பித்த 4 நிமிடங்களில் 7% வீழ்ச்சியை பதிவு

செய்தது. மார்ச் 12 இல் ஆசிய பசுபிக் சந்தைகள் மூடப்பட்டதோடு எண்ணெய் விலையும் 8 வீதத்தினால் குறைவடைந்தது. மார்ச் 15ல் மத்திய வங்கி அதன் முக்கிய வட்டி வீதத்தை முழு சதவீதமாக குறைத்தது. இந்த நிலையில் கொவிட் - 19 இன் ஏற்பட்ட மார்ச் மாதத்திற்குள்ளே பங்குச்சந்தைகள் 30% க்கும் மேலாக சரிவடைந்தது. இவ்வாறு பங்குகளின் விலை, எண்ணெய் விலை என்பவற்றில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் நிதிச்சந்தையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது.

குறிப்பாக மார்ச் 9% இல் பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்தபோது பத்திர விலைகள் எதிர்பாராத விதமாக பங்குகளின் விலைகளின் திசையில் நகர்வடைந்தன. பங்குகளை விட பாதுகாப்பானதாக பத்திரங்கள் கருதப்படுவதால் நம்பிக்கையான முதலீட்டாளர்கள் பங்குகளை வாங்கி பத்திரங்களை விற்பனை செய்வதோடு எச்சரிக்கையான முதலீட்டாளர்கள் பத்திரங்களை வாங்கி பங்குகளை விற்பனை செய்கின்றனர். இந்நிலையில் முக்கிய முதலீட்டாளர்கள் பண நெருக்கடிக்கு முகங்கொடுக்கும்போது தமது சொத்தினை விற்க முயற்சிக்கின்றனர். இதனால் விலை பரவல் அடைந்து வங்கிகள் தாங்கள் வைத்திருக்கும் பாத்திரங்களை விற்கமுடியாத நிலையில் அதனை நிறுத்தும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறாக கொவிட் - 19 காரணமாக பங்குகள், பத்திரங்களின் பெறுமதி குறைவடைந்தமை பொருளியல் உலகமயமாக்கலுக்கு ஒரு தாக்கமாக அமைகின்றது.

இச் செயற்பாட்டினை தொடர்ந்து எண்ணெய் விலையும் குறைவடைந்தது. இது பொருளாதார உலகமயமாக்கலில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. அதாவது கொவிட் - 19 இன் காரணமாக பயணத்திற்கான தேவை குறைவடைவதோடு தொழிற்சாலைகள் மூடப்பட்டமையானது அதில் பயன்படுத்தப்படும் எரிபொருளுக்கான கேள்வியையும் குறைவடையச் செய்துள்ளது. இதனால் நேரடியாக எரிபொருளுக்கான விலை குறைவடைந்துள்ளது. அத்தோடு கொவிட் - 19 காரணமாக எரிபொருள் உற்பத்தியை ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் பீப்பாய்கள் வரை குறைக்க தற்காலிக ஒப்பந்தம் மார்ச் 5 இல் வியன்னாவில் நடைபெற்ற கூட்டத்தொடரில் தீர்மானிக்கப்பட்டது (உலக வங்கி, 2020). ஆனால் மார்ச் 8 இல் சவுதி அரேபியா எதிர்பாராத விதமாக கச்சா

எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க போவதாக கூறியதோடு ஆசிய, அமெரிக்க, ஐரோப்பிய வாடிக்கையாளர்களுக்கு, பீப்பாய 6-8 அமெரிக்க டொலர் என அறிவித்தது. இதனால் எண்ணெய் விலை குறைவடைந்ததோடு எண்ணெய் உற்பத்தி செய்யும் பல நாடுகளின் நிதி நிலைமையினை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்தது. எடுத்துக்காட்டாக ஈராக் தனது வரவுசெலவுத்திட்டதில் 90% வருமானத்தை எண்ணெயிலிருந்து பெறுகின்றது. அதேபோல் மெக்ஸிக்கோ, வெனிசுலா, ஈராக், நைஜீரியா உள்ளிட்ட பிற எண்ணெய் ஏற்றுமதியாளர்களுக்கு பொருளாதார ரீதியான பாதிப்பினை ஏற்படுத்துவதாக கொவிட் - 19 வைரசானது காணப்படுகின்றது. அதற்கு பிரதான காரணம் கொவிட் - 19 இன் காரணமாக பல தொழிற்பாடுகள் தடைப்பட்டு காணப்படுகின்றமையினால் தங்கத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக விலை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இந்நிலையில் சாதாரண, மத்திய தர வர்க்கத்தினர் இவ்வளவு செலவு செய்து தங்கத்தை கொள்வனவு செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றனர். எனவே இது பல நுகர்வோரின் கொள்வனவு சக்திக்கு அப்பாற்பட்ட விடயமாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக பங்குகள், பத்திரங்கள், எண்ணெய் போன்றவற்றின் பெறுமதிகள், விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, தங்கத்தில் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு போன்றன நிதிச்சந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக பொருளாதார உலகமயமாக்கலில் தாக்கத்தை செலுத்துகின்றது.

## கொவிட் 19 மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு

கொவிட் - 19 இன் விளைவாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. 2020/2021 இற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தக மேம்பாட்டு மாநாட்டின் கருத்துபடி வெளிநாட்டு நேரடி முதலீடானது 30% தொடக்கம் 40% வரை சுருக்கமடைந்துள்ளதாகவும் உலகளாவிய அன்னிய நேரடி முதலீட்டில் சுருக்கமானது சிறிது காலம் நீடித்தால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் விளைவுகள் மிகக்கடுமையாகக் காணப்படும் எனவும் எதிர்வுகூறப்பட்டது. பொருளாதார உலகமயமாக்கலின் ஒரு பகுதியான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பாய்ச்சல் கொவிட் - 19 தொற்றின் ஆரம்பத்திலிருந்து முதலீட்டாளர்கள் 83 பில்லியன் அமெரிக்க

டாலர்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து நீக்கியுள்ளதாக மார்ச் மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. இதுவரை பதிவு செய்யப்படாத மூலதன வெளியேற்றமாக இது காணப்படுகின்றது. குறிப்பாக விமான நிறுவனங்கள், ஹோட்டல்கள், உணவகங்கள், உற்பத்தி தொழில்கள் எதிர்சக்தி துறைகளில் வெளிநாட்டு நேரடி முதலீடானது வெகுவாக குறைவடைந்துள்ளது. இதன் மூலமாக பல நாடுகள் பொருளாதார ரீதியாக பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதாவது முதலீடு குறைவடைவதன் மூலம் முதலீட்டு சேமிப்பு இடைவெளியானது ஏற்படுகின்றமை, மொத்த நிலையான மூலதன உருவாக்கம் பாதிக்கப்படுகின்றமை, ஏற்றுமதிகள் குறைடைகின்றமை, வேலைவாய்ப்புக்கள் குறைவடைகின்றமை, நுகர்வில் வரையறை காணப்படுகின்றமை, அரசாங்க வருமானம் குறைவடைந்து கொண்டு செல்கின்றமை, நாட்டினது பொருளாதாரம், அரசியல் சூழ்நிலைகள் ஸ்திரத்தன்மையற்று போகும் நிலை உருவாகின்றமை, உற்பத்தி சங்கிலி சுருக்கமடைகின்றமை, சென்மதி நிலுவை பாதிக்கப்படுகின்றமை போன்ற பல பொருளாதார தாக்கங்கள் கொவிட் - 19 இனால் வெளிநாட்டு நேரடி முதலீடு குறைவடைவதனால் ஏற்படுகின்றது. அதிலும் குறிப்பாக இலங்கை போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடு குறைவடைந்து பொருளாதார வளர்ச்சி, மற்றும் அபிவிருத்தியை பாதிப்பதாகவுள்ளது.

அடுத்து கொவிட் - 19 மூலமாக முதலீடுகள் மற்றும் உற்பத்தி என்பன குறைவடைந்து வருவதனால் சேமிப்பு, முதலீட்டு இடைவெளியானது தோன்றி அதன் மூலம் வறுமை, வருமான சமமின்மை ஏற்பட்டுள்ளது. அதாவது கொவிட் - 19 இன் தொற்றிலிருந்து பொது மக்களையும் நாட்டையும் பாதுகாக்கும் பொருட்டு நாடுகள் மூடப்பட்டு வரும் நிலையில் வேலையின்மை, சுற்றுலாத்துறை மூலமான வருமானம் குறைவடைதல், வெளிநாட்டு நேரடி முதலீடு குறைவடைதல், உற்பத்தி குறைடைதல் என பல பொருளாதாரரீதியான விளைவுகள் ஏற்பட்டுள்ளது. சேமிப்பு முதலீட்டு இடைவெளியானது தோன்றியுள்ளது. அதாவது முதலீடுகள் அதிகரிப்பதனால் உற்பத்தியை அதிகரிக்க முடியும் உற்பத்தி அதிகரிக்கும் போதுதான் வருமானம் அதிகரிக்க முதலீடு அதிகரித்து அதன் விளைவாக பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

ஆனால் இன்றைய முதலீடுகள், உற்பத்திகள், வேலைவாய்ப்புக்களால் வருமானத்தை போதியளவில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. மேலும் பெரும்பாலான மக்கள் தமது நுகர்வை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் சேமிப்பு குறைவடைந்துள்ளது. முதலீட்டு இடைவெளி விரிவடைந்து செல்கின்றமை கொவிட் - 19 இனால் பொருளாதார உலகமயமாக்கலுக்கு ஏற்பட்ட பொருளாதார தாக்கமாகும். இவ் சேமிப்பு, முதலீட்டு இடைவெளி அதிகரித்தல், வேலையிழப்பு மூலமான வறுமை நிலை அதிகரித்து செல்கின்றமையும் பொருளாதார உலகமயமாக்கலின் மீதான கொவிட் - 19 தாக்கமோகும். அதாவது ஏப்ரல் மாதத்தில் கொவிட் - 19 இன் தொற்றினால் 40 தொடக்கம் 60 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அதிக வறுமையின் கீழ் (Extreme Poverty) தள்ளப்பட்டுள்ளனர் (UN News, 2020). உலகளாவிய ரீதியில் வேலையின்மை, தொழிற்சாலை, விமான நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளமையினால் தனிநபரதும் அரசாங்கத்தினதும் வருமானமானது குறைவடைந்துள்ளது. இதன் மூலம் தனிநபரதும், நாட்டினதும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் அதேவேளை வறுமையால் வாடிக்கொண்டிருக்கும் மக்கள் அதி உயர் வறுமை (Extereme Poverty) இனுள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் கொவிட் - 19 இன் விளைவாக தெற்காசியாவில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்தோடு கொவிட் - 19 இனால் 71 மில்லியன் மக்கள் 1.9 டொலருக்கு குறைவான வருமானத்தை நாளொன்றுக்குப் பெறுகின்றனர் (UN News, 2020). இந்நிலை தொடருமாக இருந்தால் வறுமையால் பாதிக்கப்படும் மக்கள் எண்ணிக்கை அதிகரித்து அதன் மூலம் பொருளாதார உலகமயமாக்கலானது வெகுவாகப் பாதிப்படையும். அதேவேளை கொவிட் - 19 இன் தாக்கத்தால் அதிகளவான பிள்ளைகள் வறுமை தாக்கதிற்கு உட்பட்டுள்ளனர் என யுனிசெப் (UNICEF) ஆய்வு கண்டறிந்துள்ளது. அதாவது கொவிட் - 19 நோய்த்தாக்கத்தினால் ஒரு குடும்பம் வறுமைத்தாக்கத்திற்கு உட்படும் போது அதில் அதிகளவான பாதிப்பு குழந்தைகளுக்கே ஏற்படுகின்றது. அதாவது வறுமையால் பசி, பட்டினியால் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு உட்பட்டுவதனால் பிள்ளைகளின் முழு வாழ்க்கையையும் பாதிக்கக் கூடிய

ஒன்றாகவே விளங்குகின்றது. கொவிட் - 19 தாக்கத்திற்கு முன்னர் ஆபிரிக்கா நாடுகளில் 16% குழந்தைகள் மட்டுமே சமூகப்பாதுகாப்பால் பாதுகாக்கப்பட்ட நிலையிலும் கோடிக்கணக்கான குழந்தைகள் ஏழைகளாக அவதியுறும் நிலையே காணப்பட்டது. அந்நிலைமை நோய்த் தோற்றுக்குப் பின்னர் மேலும் அதிகரித்துள்ளது. அதாவது வறுமைக்கோட்டினுள் வாழ்ந்த பிள்ளைகளுக்கு சுகாதார பாதுகாப்பு, கல்வி, ஊட்டச்சத்து, வீட்டு வசதிகள் இல்லாதவொரு தன்மை காணப்பட்டது. இந்நிலைமை கொவிட் - 19 நோய்த்தாக்கத்தால் மேலும் அதிகரித்ததோடு வறுமையினால் ஊட்டச்சத்து இல்லாத பல பிள்ளைகள் இலகுவாக கொவிட் - 19 தாக்கத்திற்கு உட்பட்டமையையும் சுட்டிக்காட்டுகின்றது. அதேபோல் ஏற்கனவே மோதல், வன்முறையால் பாதிக்கப்பட்ட நாடுகளிலும் பிள்ளைகளின் நிலை கொவிட் - 19 இன் பின்னர் மிகவும் மோசமடைந்துள்ளது. இதனடிப்படையிலேயேதான் 2020ம் வருடம் முடிவதற்குள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை 15% இனால் அதிகரித்து 672 மில்லியன் எட்டும் என Unicef மற்றும் Save the Children அமைப்புக்கள் தமது அறிக்கையில் எதிர்வு கூறியுள்ளனர். இவற்றின் தொகுப்பினடிப்படையில் கொவிட் - 19 ஆனது உலகளாவிய ரீதியில் வறுமை நச்சு சுழல்வட்டத்தை உருவாக்கியுள்ளது.

### கொவிட் - 19 மற்றும் உற்பத்தி

உலகளாவிய ரீதியில் கொவிட் - 19 வைரஸ் காரணமாக உற்பத்தி குறைவடைந்து கொண்டு வருகின்றது. அதாவது 2019 களிலேயே கொவிட் - 19 நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட பொருளாதார இடையூறுகள் காரணமாக சர்வதேச வர்த்தகங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் விளைவாக உற்பத்தி குறைவடைய ஆரம்பித்துள்ளது. பிரதானமாக குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் உலகளாவிய விநியோகங்கள் மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரச்சனைகள் கேள்வியை அதிகரிக்கச் செய்து நிரம்பலை குறையடையச் செய்துள்ளது. பொதுவாக ஒரு நாட்டில் உற்பத்தி குறைவடையுமாயின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு பொருட்களுக்கான விலை அதிகரித்தல், பணவீக்கம் ஏற்படல் பணப்பற்றாக்குறை ஏற்படல், ஏற்றுமதி

குறைவடைதல் இறக்குமதி அதிகரித்தல் என பல பொருளாதார ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தும். இதனடிப்படையில் கொவிட் - 19 நோய்தாக்கத்தினால் உலகளாவிய ரீதியில் உற்பத்திகள் குறைவடைந்துள்ளமையினால் உலக நாடுகளில் பொருட்களின் தட்டுப்பாடு காணப்பட்டு பொருட்களின் விலை அதிகரிக்கும் நிலையும் காணப்படுகின்றது. இலங்கையில் 2015 இனை அடியாண்டாகக் கொண்டு 2020 ஏப்ரல் மதிப்பீட்டின் படி மொத்த உற்பத்தியானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 48.7% இனால் குறைவடைந்து சென்றுள்ள அதேநேரம் (Trading Economics, 2020). இதன் படி இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2019.12.18 இல் 2.7% இனால் அதிகரித்து காணப்படும் அதேவேளை 2020. 04. 01 இல் 2% ஆக காணப்பட்டது. மேலும் இலங்கை போன்று பல நாடுகளில் இந்நிலை ஏற்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் பொருத்தட்பாடு நிலவிக்கொண்டிருப்பதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக அவற்றின் விலைகள் தொடர்சியாக அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றது. அதேவேளை அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்தாலும் வேறு சில பொருட்களின் விலைகள் இரண்டு அல்லது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. மேலும் இலங்கையைப் பொறுத்துரையில் அரசாங்கம் சில அத்தியாவசியப் பொருட்களுக்கு (உதாரணமாக ரின்மீன், பருப்பு சீனி) உத்தரவாத விலையை நிர்ணயித்திருந்தாலும் கூட நடைமுறையில் அவற்றின் விலைகள் குறையவில்லை மாறாக விலைகள் அதிகரித்துள்ளதோடு வியாபாரிகள் அப்பொருட்களை பதுக்கி வைத்திருப்பதனால் அவற்றினைப் பெறுவதில் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

விலைக்கட்டுப்பாட்டினை அரச கட்டுப்பாட்டில் உள்ள சதோச (அத்தியாவசிய உணவுப்பொருட்கள்) மற்றும் அரச ஒசுசல போன்ற நிறுவனங்கள் (இந்நிறுவனங்கள் பெரும்பாலும் நகரங்களை அண்டிய பகுதிகளிலேயே காணப்படுவதனால் இதன் பயன்களை கிராமப்புற மக்கள் பெறுவது மிகவும் அரிதானதாகவே உள்ளது) மாத்திரமே கடைப்பிடிப்பதுடன் தனியார் சுயமாக விலை நிர்ணயம் செய்யும் போக்குக் காணப்படுகின்றது. இது சாதாரண மக்களின் கொள்வனவு சக்தியில் எதிர்கணியத்தாக்கத்தினை

ஏற்படுத்தியுள்ளது. எனவேதான் 2019இல் 4.3% ஆக காணப்பட்ட பணவீக்கம் 2020 இன் ஆரம்பத்தில் 4.67% ஆக உயர்வடைந்ததோடு 2020 மார்ச் மாதத்தில் 5.4% ஆக உயர்வடைந்துள்ளது. அத்தோடு இலங்கையில் மார்ச் 2020 இல் 185.06 ரூபாவாக இருந்த 1 டொலரின் மாதச் சராசரி பெறுமதி ஏப்ரல் 09. 2020 இல் 199.75 ரூபாவாக அதிகரித்து. இது இலங்கையின் ரூபாவின் பெறுமதி தேய்வடைவதனை காட்டுகின்றது. இதற்கு பிரதான காரணம் கொவிட் - 19 இனால் உள்நாட்டில் பொருட்தட்டுப்பாடு நிலவுவதனால் ஏற்றுமதி குறைடைந்து இறக்குமதி அதிகரித்தமையாகும். இந் நாணயப்பெறுமதியும் கூட இன்றைய பணவீக்கம் அதிகரித்த சூழலுக்கு காரணமாக அமைகின்றது. இவ்வாறு இலங்கை போன்ற பல நாடுகளில் உற்பத்தி குறைவடைந்தமையினால் பொருட்தட்டுப்பாடு, பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைதல், பணவீக்கம் ஏற்படல், ஏற்றுமதி வருமானம் குறைவடைதல் என பல தாக்கங்கள் கொவிட் - 19 நோய்த்தொற்றின் பின்னர் ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் உற்பத்தி குறைவடைதல் பொருளாதார உலகமயமாக்கலில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதனை காணமுடிகின்றது.

கொவிட் -19 நோய்த்தாக்கமானது நாடுகளின் பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார உலகமயமாக்கலை பாதிப்படையச் செய்துள்ளது. கொவிட் - 19 வைரசானது தோற்றம் பெற்ற சீனாவினைப் பொறுத்த வரையில் 2019ம் ஆண்டின் இறுதியில் 2020 களில் பொருளாதார வளர்ச்சி வீதம் 5.7% ஆகக் காணப்படும் என எதிர்வு கூறப்பட்ட போதும் ஆனால் கொவிட் - 19 தாக்கத்தினால் 2020இல் சீனாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2.4% ஆகவே காணப்படுகின்றது (CNN Business, 2020). இது கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் மிகக் குறைவாகும் அதேவேளை சீனா நெருக்கமான பொருளாதார உறவுகளைப் பேணும் அவுஸ்ரேலியா, தென்கொரியா, ஜப்பான், தாய்லாந்து, ஜேர்மன் போன்ற நாடுகளிலும் மற்றும் வைரஸ் வேகமாக பரவிய தென்கொரியா, இத்தாலி ஆகிய நாடுகளிலும் கணிசமானளவு பொருளாதார வீழ்ச்சி பதிவாகியுள்ளது. குறிப்பாக இத்தாலியில்

நாடு முழுவதும் முடக்கப்பட்டதன் (Lockdown) காரணமாக 2020ம் ஆண்டில் இத்தாலியின் பொருளாதார வளர்ச்சி -1.6% ஆக காணப்படுகின்றது. அதாவது கொவிட் - 19 தொற்றிலிருந்து விடுபடும் பொருட்டு சுகாதார துறைக்கே அதிகளவான நிதி ஒதுக்கப்படுவதனால் அபிவிருத்தியுடன் தொடர்பான முதலீடுகள் குறைவடைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் சுற்றுலாத்துறை வீழ்ச்சி, பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடைதல், பணவீக்கம் அதிகரித்தல் என பல பொருளாதார பிரச்சனைகள் தோற்றம் பெற்று இன்றைய நிலைமையின்படி பொருளாதார அபிவிருத்தியை கேள்விக்குறியாக்கியுள்ளது. தற்போது உலகநாடுகள் நோய்தொற்றிலிருந்து பாதுகாப்பதனையே பிரதான நோக்கமாகக் கொண்டு தொழிற்படுவதால் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்துவது குறைவாகவே காணப்படுகின்றது.

## கொவிட் - 19 மற்றும் சர்வதேச வர்த்தகம்

கொரோனா வைரஸானது பொருளாதார உலகமயமாக்கலில் சர்வதேச வர்த்தகத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு உலக நாடுகளால் பின்பற்றப்பட்டு வருவதன் விளைவே உலகமயமாக்கலாகும். அவ் உலகமயமாக்கலின் விளைவாகவே சர்வதேச வர்த்தகம் இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளது. ஒரு பொருள் உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள், இடைநிலை பொருள் என பல நாடுகளின் பங்களிப்பு காணப்படும் அதேவேளை வளக்கிடைப்பனவின் அடிப்படையில் சில நாடுகள் தன்னிடம் நிறையாக (மிகை) உள்ளதை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தனது நாட்டில் குறைவாக காணப்படும் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதன் மூலம் பரஸ்பர நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றன. இதுவே சர்வதேச வர்த்தகத்தின் மூலமாக இடம்பெறுகின்ற செயற்பாடாகும். இத்தொழிற்பாட்டின் மூலமாக வளங்களின் உச்சப்பயன்பாடு, வருமான அதிகரிப்பு என்பன நாடுகளிற்கு கிடைக்கின்றன. ஆனால் கொவிட் - 19 தாக்கத்தினால் சர்வதேச வர்த்தகமானது வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் தடை, வேலை செய்யும் தொழிற்சாலைகள் மூடப்பட்டமை போன்ற காரணங்களால் ஏற்றுமதி, இறக்குமதி, உற்பத்தி பாதிக்கப்பட்டு சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் ஸ்தம்பித்து போயிருப்பதனை

எம்மால் அவதானிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக கொவிட் - 19 ஆனது சீனாவில் ஆரம்பமானது. இதனால் சீனாவின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் தடைப்பட்டன. இதனால் சீனாவிலிருந்து தமது உற்பத்தி பொருட்களுக்குத் தேவையான இடைநிலை பொருட்களை பெறும் நாடுகள் பொருட்கள் இல்லாமையினால் தமது உற்பத்தியை நிறுத்தியுள்ளன. இதனால் பல நாடுகளின் உற்பத்தி, ஏற்றுமதியானது குறைவடைந்துள்ளதனை காணமுடிகின்றது. அதுமட்டுமல்லாமல் இலங்கை 2019ம் ஆண்டு ஆடை ஏற்றுமதியில் முதலாவது இடத்தைப் பெற்றது. அமெரிக்கா, ஐரோப்பியா ஆகிய நாடுகளுக்கு 5.3 மில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியுள்ள ஏற்றுமதியினை மேற்க்கொண்டுள்ளதோடு 2020 களில் இதனை மேலும் அதிகரித்து ஏற்றுமதி வருமானத்தை பெறுவோம் என 2019 களில் எதிர்வு கூறியிருந்தனர். ஆனால் இலங்கையில் ஆடை உற்பத்தி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 61.3% இனால் குறைவடைந்திருப்பது சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்பட்டமைக்கு காரணமாகும். இவ்வாறு பல நாடுகளில் சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கொவிட் - 19 இனால் பொருளாதார உலகமயமாக்கலுக்கு ஏற்படுத்தப்பட்ட தாக்கமாகும்.

### கொவிட் -19 மற்றும் அரச செலவுகள்

கொவிட் - 19 இன் மூலமாக அரச செலவுகள் அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கும் பொதுவாகக் காணப்படுகின்றது. அதாவது கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்டவர்களை பரிசோதிப்பதற்காகவும் அவர்களை குணப்படுத்துவதற்காகவும் அரசாங்கம் சுகாதார துறைக்கென பெருமளவிலான நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. அதேவேளை இடர்காலத்தில் தொழில் வாய்ப்பிழந்த மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்காக அரசாங்கம் உதவித்திட்டங்களை வழங்குவதால் அதற்கான செலவுகளும் அதிகரிக்கின்றன. இதனால் அரசாங்கத்தின் ஏனைய சமூகநல மற்றும் முதலீட்டு செலவுகள் குறைவடைவதனால் அது எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மேலும் சிக்கல் நிலைக்கு கொண்டு செல்கின்றது. மேலும் அரசாங்கங்களில் கடன் பெற்றவர்களுக்கு நோய் இடரைக் கவனத்தில் கொண்டு வட்டிவீதத்தை குறைத்தல் கடனை திருப்பி செலுத்தும் கால எல்லையை அதிகரித்தல் வரிகளைத் தளர்த்துதல் ஆகிய

காரணிகளால் அரசாங்கத்திற்கு வருமானம் குறைவடைந்து செலவு அதிகரித்து வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை பிரச்சனையும் ஏற்படுகின்றது.

## கொவிட் - 19 மற்றும் சூழல் தாக்கம்

வளி பயணத் தடை, தொழில் துறைகள் மூடப்பட்டமை காரணமாக வளி மாசுபாடானது குறைவடைந்துள்ளது. அதேவேளை பயணத்தடைகள் மூலமாக சீனாவில் 25% கார்பன் வெளியேற்றம் குறைவடைந்தது. இதன்படி சீனா 2019ம் ஆண்டு இதே காலகட்டத்தில் உற்பத்தி செய்த கார்பன் டை ஆக்சைட் சுமார் 200 மில்லியனுக்கும் குறைவாகவே உற்பத்தி செய்தது அதேபோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நைட்ரஜன் ஆக்சைடு வெளியேற்றத்தில் குறிப்பிடத்தக்க சரிவானது ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வளிமாசடைவுக்கு காரணமான வாயு வெளியேற்றங்கள் (Lockdown) காரணமாக தொழிற்சாலைகள் என்பன மூடப்பட்டதன் காரணமாக ஏற்பட்டது. அதேபோல் கடல்வழி போக்குவரத்து, மீன்பிடித்தல் என்பன குறைவடைந்தமையினாலும் தொழிற்சாலை கழிவுகள் குறைவடைந்தமையினாலும் நீரின் தூய்மையும் பேணப்படும். நீர் மாசடையும் தன்மை கொவிட் - 19 இனால் உலகமயமாக்கலில் ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் நீர்வாழ், நிலவாழ் உயிரினங்கள் மனிதர்களின் நடமாட்டம் குறைவடைந்தமையினால் சுதந்திரமாக சுற்றித்திரியும் நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு மிருகங்களை வேட்டையாடுதல் குறைவடைந்துள்ளது. மேலும் சட்டவிரோத காடழிப்பு நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளன. இதன் விளைவாக மரங்கள் வளர்ந்து இயற்கை எழுச்சியோடு காணப்படுகின்றது. இதன் மூலமாக வளிமாசுபடுதல், நீர் மாசுபடுகள் குறைவடைந்து இயற்கை சூழலில் தூய்மை பேணப்படும் நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கவொன்றாகும். மேலும் கொவிட் - 19 இனால் தொழிற்சாலைகள் கழிவுகள் குறைவடைந்து வீட்டுக்கழிவுகள் அதிகரித்துள்ளன. அதேபோல் வைத்தியசாலை கழிவுகளான முகமூடி, ரிசு போன்ற கழிவுகள் அதிகமாக வெளியேறுகின்றமை கொவிட் - 19 இனால் ஏற்பட்ட சூழல் ரீதியான தாக்கமாகும். எடுத்துக்காட்டாக சீனாவின் வுகாவினில் வைத்தியசாலை கழிவுகள் 200 தொன்னுக்கும் அதிகமாகும். மேலும் பிளாஸ்டிக்

பாவனை அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கு கொவிட் - 19 இனால் சூழலியல் ரீதியான உலகமயமாக்கலில் ஏற்பட்டுள்ளது.

### கொவிட் - 19 மற்றும் சமூகத்தாக்கம்

கொவிட் - 19 இனால் சமூக ரீதியாக ஏற்படும் பாதிப்புக்களாக கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. அதாவது கொவிட் - 19 காரணமாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என அனைத்து கல்விசார் நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளதனால் சிறு பிள்ளைகள் தொடக்கம் முதுமானிப்பட்டம் முடித்தவர்கள் வரை அனைவரும் கொவிட் - 19 பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளாவிய ரீதியில் சுமார் இரண்டு வில்லியன் கல்வியியலாளர்கள் கொவிட் - 19 இனால் தமது கற்கை நெறிகளில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர் (Unicef, 2020). மேலும் கொவிட் - 19 இனால் சமூக உலகமயமாக்கலில் ஏற்பட்டுள்ள மற்றுமொரு தாக்கம் தகவல் தொடர்பாடல் பாவனை அதிகரித்தமையாகும். கொரோனா காரணமாக ஏற்டும் இடையூறுகளை தவிர்பதற்காக, அதாவது கொவிட் - 19 இனால் ஏற்பட்ட இடையூறுகளை தவிர்க்கவும் அன்றாட வாழ்கையை கொண்டு செல்வதில் காணப்படும் தடைகளை தவிர்க்கவும் இணையத்தளமானது அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. ITU மதிப்பீட்டின் படி உலக சனத்தொகையில் 53 வீதமானோர் இணையத்தை பயன்படுத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இணையத்தளத்தினூடாக தமது கல்வி, தொழில் மற்றும் அத்தியாவசிய செயற்பாடுகளை மேற்கொள்ளல் நன்மைபயக்கவில்லை. இணையத்தில் விளையாடல் மற்றும் அனாவசியமான இணையத்தளங்களை பாவித்தல் இணையத்திற்கு அடிமையாதலின் மூலமாக உடல், உள ரீதியான பல பாதிப்புக்க்ள் ஏற்பட வாய்புண்டு. மேலும் கொவிட் - 19 நோய்த்தொற்று காரணமாக பலர் வீட்டினுள்யே இருத்தல் மன உளைச்சலுக்கு ஆளாகுவதற்கு வாய்ப்பை அதிகளவில் ஏற்படுத்தியதோடு மக்கள் கொவிட் - 19 காலத்தில் தற்கொலையும் இடம்பெற்றுள்ளது.

## கொவிட் - 19 மற்றும் அரசியல் தாக்கம்

அரசியல் ரீதியான உலகமயமாக்கலில் கொவிட் - 19 இன் தாக்கம் சீனாவில் தோற்றம் பெற்ற கொவிட் - 19 வைரஸ் தொடர்பாக அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே மோதல் நிலை ஏற்பட வாய்ப்பளித்துள்ளது. இம் மோதல் நீண்ட காலத்திற்கு தொடர்வதற்கு வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. நாடுகளிடையே முரண்பாடு தோன்றக்கூடிய வாய்ப்புக்கள் கொவிட்-19 இன் தோற்றுவித்துள்ளது. மேலும் கொவிட் - 19 இனால் அதிகமானோர் பாதிக்கப்படுவதனால் அவர்களுக்கான சுகாதார செலவு மற்றும் கொவிட் - 19 இனால் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கல் என கொவிட் - 19 இனால் அரசின் சுமை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் பல்வேறு சவால்களை அரசுக்கு ஏற்படுத்துகின்றது.

## முடிவுரை

இவ்வாறாக கொவிட் - 19 ஆனது பொருளில், சூழலியல், சமூகவியல் மற்றும் அரசியல் உலகமயமாக்கலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதனை மேலுள்ள விளக்கங்களிலிருந்து அவதானிக்க கூடியதாகவுள்ளது.

## *உசாத்துணைகள்*


*BBC News. 2020. [ Online] Available at: https://www.bbc.com/news/business-52660591. Available at: https://www.ncsl.org/.Accessed 20.07.2020.*

*CNN Business. 2020. [Online] Available at: https://edition.cnn.com/2020/09/15/economy/china-economy-retail-intl-hnk/index.html. Accessed 03.09.2020.*

*Economy next. 2020. [Online] Available at: https://economynext.com/brand_voice/after-covid-19-opportunities-for-sri-lanka-tourism-and-property/. Accessed 01.09.2020.*

*National Conference of state Legislatures. 2020. [Online] Available at : https://www.ncsl.org/. Accessed 20.07.2020.*

*Trading Economics. 2020. [Online] Available at: https://tradingeconomics.com/sri-lanka/manufacturing-pmi. Accessed 03.09.2020.*

*UN News. 2020. [Online] Available at: https://news.un.org/en/story/2020/09/1072602. Accessed 03.09.2020.*

*UNICEF.2020. [Online] Available at: https://data.unicef.org/topic/education/covid-19/. [Accessed 04.09.2020].*

*World Bank. 2020. [Online] Available at: https://www.worldbank.org/en/region/mena/brief/coping-with-a-dual-shock-coronavirus-covid-19-and-oil- . Accessed 01.09.2020.*

# அரச பொதுச்செலவு

கி. கிருபாஹெனி[3] & திருமதி. ஜெயப்பிரபா சுரேஸ்[4]

## அறிமுகம்

பேரினப் பொருளியலில் உள்ளடக்கப்படும் பல்வேறு காரணிகளுள் அரச பொதுச் செலவானது மிக முக்கியமான காரணியாகும். வளரும் நாடுகளில் பொதுச் செலவுக் கொள்கை பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதோடு வேலை வாய்ப்புக்களையும் மேம்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல் வறுமை மற்றும் வருமான விநியோகத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் பயனுள்ள பங்கையும் கொண்டுள்ளது எனலாம். இவ் அரச பொதுச் செலவு தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்கள் வெவ்வேறுபட்ட பொருளியலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அரச பொதுச் செலவு என்பது பொதுவாக மத்திய அரசு, மாகாண, நகர மற்றும் பிராந்திய பொது அமைப்புக்கள் மக்களைக் காக்கவும் பேணவும் சமுதாய பொருளாதார நலனைப் பெருக்கவும் மேற்க்கொள்கின்ற செலவுகளாக பொதுச் செலவுகள் வரையறை செய்யப்படுகின்றது. அதாவது ஒரு நாட்டின் அரசாங்கம் மக்களின் வாழ்கைத் தரத்தைப் பேணுவதற்கும் வாழ்கைத் தரத்தைப் படிப்படியாக அதிகரிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் செலவினை அரச பொதுச்செலவு என வரைவிலக்கணப்படுத்தலாம்.

பொதுச் செலவினது முக்கியத்துவமானது ஆரம்ப காலத்தில் இருந்ததை விட தற்காலத்தில் அதிகளவில் உணரப்படுகின்றது. ஏனெனில் பொதுச் செலவு அதிகரிக்க வரிவருமானமும் அதிகரிக்கின்றது. அரசின் எல்லா நிதி நடவடிக்கைகளின் இறுதி நோக்கமாகப் பொதுச் செலவு அமைகின்றது. தனியார் துறையின் பொருட்கள், சேவைகள் தொடர்பான நிரம்பலினைத்

---

[3] பொருளியல் கற்கைகள் அலகு, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

[4] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

குறைவடையச் செய்து சந்தைப் பொறிமுறையினூடாக வழங்கப்படாத பொதுப்பொருட்கள், சேவைகளை வழங்குதலும் இதன் நோக்கமாகும். உதாரணமாக இவ் பொதுப்பொருட்களுக்குள் உள்ளடங்குபவையாக பாதுகாப்பு, வீதி, பாலங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மற்றும் சந்தைப் பொறிமுறையின் கீழ் குறைவாக வழங்கப்படுகின்ற சமூகநலப் பொருட்கள், சேவைகளான வைத்தியசாலை, பாடசாலை என்பவற்றை வழங்குதல் மற்றும் நலன்புரிக் கொடுப்பனவு, ஊனமுற்றோருக்கான நிதியுதவி போன்ற பொதுநலச் சேவைகளை வழங்குதல் போன்றவை பொதுச் செலவில் உள்ளடங்குபவையாகும்.

மேலும் வருமான மீள்பங்கீட்டை மேற்கொண்டு சமூக சமத்துவத்தை ஏற்படுத்துதல். அதாவது வருமானம் கூடுதலாக உள்ளவர்களிடமிருந்து அரசானது வரியினைப் பெற்றுக்கொண்டு அவ் வரிவருமானத்தை வருமானம் குறைவாக உள்ளவர்களின் நன்மை கருதி செலவிடுவதால் அங்கு சமூக சமத்துவம் ஏற்படுகின்றது. மேலும், அரச பொதுச் செலவானது பேரினப் பொருளாதார உறுதி நிலையை ஏற்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்கின்றது. அதாவது மக்களுக்கான கல்வி, பயிற்சிகளை வழங்குதல், தொழிலாளர் உற்பத்தி என்பவற்றை விருத்தி செய்வதனூடாக பேரினப் பொருளாதார உறுதி நிலையினைப் பேணக்கூடியதாகவுள்ளது. இறைக்கொள்கை, பணக்கொள்கையினூடாக மொத்தக் கேள்வியினை அதிகரிப்பதன் மூலம் கேள்வி முகாமைத்துவத்தை மேற்க்கொள்ளுதல், அதே போன்று பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு முதலீடுகளை மேற்க்கொள்ளுதல். உதாரணமாக மீள்கட்டுமானம், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலைக் குறிப்பிடலாம். அதேபோல் தனியார்துறை வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு வழங்குதல், புறத்தன்மை வாய்ந்த எதிரான விளைவுகளை குறைத்தல், அதாவது சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறாக ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பொதுச் செலவானது பல்வேறு வழிகளில் முக்கியத்துவம் பெறுவதோடு அரச பொதுச் செலவானது பல்வேறுபட்ட அடிப்படைகளைக் கொண்டு பல வகைப்பாடுகளாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் அரச செலவின் வகைகளை கீழ் வரும் பகுதியில் நோக்கலாம்.

## அரச பொதுச் செலவின் வகைகள்

அரச பொதுச்செலவின் வகைப்பாடானது குருசாமி (2005) என்பவரால் எழுதப்பட்ட பொதுநிதி என்ற நூலினூடாக பொருளாதார வகைப்படுத்தலின் அடிப்படையில், நன்மையின் அடிப்படையில், வருவாயின் அடிப்படையில், பணிகளின் அடிப்படையில், விருப்பத் தேவைச் செலவுப் பாகுபாட்டின் அடிப்படையில், தேவையான, பயனுள்ள, மிகையான செலவுகள் என்றடிப்படையில், முக்கியத்துவத்தின் அடிப்படையில் எனவும், டால்டனின் வகைப்படுத்தலின் அடிப்படையில், உண்மையான மற்றும் மாற்றுகின்ற செலவு என்ற அடிப்படையில், உற்பத்தி மற்றும் உற்பத்தியற்ற செலவு என்ற அடிப்படையில், நிலையான மற்றும் மாறுகின்ற செலவு என்ற அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வகைப்பாடுகள் கீழே விரிவாக கூறப்பட்டுள்ளது.

## பொருளாதார வகைப்படுத்தலின் அடிப்படையில் வகைப்படுத்தல்

இவ் வகைப்படுத்தலின் கீழ் பொதுவாக அரச பொதுச்செலவானது இருவகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றது. அவையாவன,

01. நடைமுறைச் செலவு
02. மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும்
    - மூலதனச் செலவு
    - மீள்கொடுப்பனவு கழித்த தேறிய கடன் வழங்கல்

## 01. நடைமுறைச் செலவு அல்லது மீண்டெழும் செலவுகள்

அரசாங்கம் தனது நிர்வாகத்தை நடாத்துவதற்காக மேற்கொள்ளும் எல்லாச் செலவுகளும் நடைமுறைச் செலவுகள் எனப்படும். இது ஒவ்வொரு ஆண்டும் அரச சேவைகளைப் பேணுவதற்காக மேற்க்கொள்ளப்படும் செலவுகளாகக் காணப்படும். இச்செலவுகள் ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்படுவதால் இவற்றை மீண்டெழும் செலவுகள் அல்லது மீள்வரும் செலவுகள் அல்லது உருள் செலவுகள் எனவும் கூறுவர். மக்களின் நிகழ்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மேற்க்கொள்ளப்படும் செலவுகளாக இவை அமையும்.

இச்செலவானது பிரதானமாக மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றது. அவையாவன,

a) பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு
b) நடைமுறை மாற்றல்கள்
c) தேசிய பொதுப்படுகடன் வட்டி

## a) பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு

பொருட்கள் சேவைகளின் கொள்வனவுக்காக குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் அரசினால் மேற்க்கொள்ளப்படும் செலவுகள் இவையாகும். அதாவது அரசாங்கம் தான் மேற்கொள்ளும் செலவுகளுக்கு பதிலாக பொருட்களை அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதனை இது குறிக்கும். இச்செலவில் பிரதானமாக சம்பளங்களும் கூலிகளும், ஏனைய பொருட்கள் சேவைகளும் என இரண்டு செலவுகள் உள்ளடக்கப்படுகின்றன.

## b) நடைமுறை மாற்றல்கள்

அரசாங்கம் எந்தவிதமான பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளாமல் அரசினால் மேற்க்கொள்ளப்படுகின்ற செலவுகளே மாற்றல் கொடுப்பனவுகளாகும். அதாவது அரச துறையிலிருந்து வேறு ஒரு துறைக்கு பணம் மாற்றப்படுவதனை இது குறிக்கும். நடைமுறை மாற்றலானது அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான நடைமுறை மாற்றல்கள், வீட்டுத்துறையினருக்கான நடைமுறை மாற்றல்கள், அரசின் ஏனைய மட்டங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் எனப் பாகுபடுத்தப்படுகின்றது.

## c) தேசிய பொதுப்படுகடன் வட்டி

ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் பாதீட்டுப் பற்றாக்குறைக்காக உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் கடன்களைப் பெற்றுக் கொள்கின்றது. இக்கடன்களுக்கான வட்டிகளை செலுத்துவதற்கென ஒவ்வொரு ஆண்டும் பாதீட்டிலிருந்து ஒதுக்கப்படும் நடைமுறைச் செலவுகளே இவையாகும். இது வெளிநாட்டுப்படுகடன் வட்டிக்கொடுப்பனவு, உள்நாட்டு படுகடன் வட்டிக்கொடுப்பனவு என இருபிரிவுகளைக் கொண்டுள்ளது.

## 02. மூலதனச் செலவும் மீள் கொடுப்பனவு கழித்த தேறிய கடன் வழங்கலும்

### மூலதனச் செலவு

ஒரு நாட்டின் அரசு தனது மூலதனப் பொருட்கள் தொடர்பான இருப்பினை அதிகரிப்பதற்காக மேற்கொள்கின்ற செலவுகளே மூலதனச் செலவாகும். அதாவது பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்கு பயன்படுத்துகின்ற மூலதனப் பொருட்களை உருவாக்குவதற்கும், கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவுகளே இவையாகும். இது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பயன்பாட்டைக் கொண்ட மெய்ச்சொத்துக்களின் கொள்வனவு, அமைப்பு பேணல் போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளாக காணப்படும்.

### மூலதனச் செலவின் வகைகள்

இலங்கை அரசின் மூலதனச் செலவுகளானது பொருளாதார ரீதியாக பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன:

#### 1. உண்மை அல்லது மெய்ச்சொத்துக்களின் கையேற்பு

அரசாங்கம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பயன்பாட்டைக் கொடுக்கக்கூடிய உண்மைச் சொத்துக்களை கொள்வனவு செய்தல் தொடர்பாகவும் அவற்றின் அமைப்பு, பேணல் என்பன தொடர்பாகவும் மேற்கொள்ளும் செலவுகளை இது குறிக்கும். உதாரணமாக கட்டடங்கள், இயந்திரங்கள், பொறிகள், தளபாடங்கள் என்பன தொடர்பான மூலதனச் செலவுகள்.

#### 2. மூலதன மாற்றல்கள்

அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளில் பல அரசினால் நேரடியாக வழங்கப்படாது அரசகூட்டுத்தாபனங்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றால் வழங்கப்படுகின்றன. இத்தகைய நிறுவனங்கள் தமது மூலதனப்பொருட்கள் தொடர்பான கையிருப்பினை அதிகரிப்பதற்காக அல்லது மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்காக அரசினால் மேற்கொள்ளப்படும் ஒருபக்க கொடுப்பனவுகளே மூலதன மாற்றல்களாகும்.

### ✚ மீள் கொடுப்பனவு கழித்த தேறிய கடன் வழங்கல்

குறித்த வருடத்தில் அரசகூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள் போன்றவற்றிற்கு அரசினால் வழங்கப்படும் கடன்களில் அந்நிறுவனங்களினால் குறித்த வருடத்தில் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன்களைக் கழித்துவரும் தேறிய தொகையினை இது குறிக்கும். இதில் முற்பணக் கணக்குகள், கடன் வழங்கல் அல்லது நிதிச்சொத்துக்களின் கொள்வனவு, மீளமைப்பு செலவுகள், கடன் மீள் கொடுப்பனவுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

### நன்மையின் அடிப்படையில் அரச பொதுச்செலவின் பாகுபாடு

ஜேர்மனிய அறிஞரான கோன் (Cohn) என்பவரும் அமெரிக்க வல்லுநரான பிளின் (Plehn) என்பவரும் பொதுச் செலவினை மக்களுக்கு நன்மையை வழங்கும் முறையின் அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கின்றனர்.

### 01. முழுச் சமுதாயத்திற்கும் நன்மையளிக்கும் பொதுச்செலவு

சமுதாயத்திற்கு நன்மையளிக்கின்ற பொதுச் செலவுகள் இவ்வகையினுள் உள்ளடங்கும் அந்தவகையில் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகியவற்றிற்கு செலவிடுவது இவ்வகைக்குள் உள்ளடக்குகின்றது. இது மிகவும் முக்கியமான பிரிவாகும்.

### 02. குறிப்பிட்ட சிலருக்கு (ஒரு பகுதியினருக்கு) நன்மை தரும் பொதுச்செலவு

சமுதாயத்தில் சிலருக்கு மட்டும் நன்மை தருகின்ற பொதுச்செலவுகள் இந்தப்பிரிவில் உள்ளடங்கும். சமுதாயத்தில் வலுவற்ற மக்களுக்கு சிறப்பு நன்மைகளை அளிக்க மேற்க்கொள்கின்ற அரசின் செலவுகளைக் கூறலாம். பிற்பட்ட இனத்தவர்களுக்கு வழங்குகின்ற கல்விச்சலுகை இத்தகைய செலவுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

### 03. நேரடியாகச் சிலருக்கும் மறைமுகமாகச் சமுதாயம் முழுமைக்கும் நன்மை வழங்கும் பொதுச்செலவு

சமுதாயத்தில் சிலருக்குச் சிறப்பு நன்மை வழங்க சில செலவுகளை அரசு மேற்க்கொள்ளலாம். அவை இறுதிநிலையில் சமுதாயத்தின் பொதுநலனுக்கு ஆக்கந்தரும். அப்படிப்பட்ட செலவுகள் இந்தப்பிரிவினுள் உள்ளடங்கும். எடுத்துக்காட்டாக, தாய் சேய் நலனுக்காக அரசு செலவிடும் பணத்தைக் கூறலாம். இந்தச் செலவு நேரடியாகப் பெண்களுக்கு நன்மை தருகின்றது. ஆனால் காலப்போக்கில் நல்ல ஆரோக்கியமான சமுதாயம் உருவாக இந்தச் செலவு துணை செய்வதைக் காணலாம்.

### 04. குறிப்பிட்ட குழுக்களுக்கு நன்மை கொடுக்கும் பொதுச்செலவு

சமுதாயத்தினுள்ள சில குழுக்களுக்கு மட்டும் நன்மை வழங்க அரசு செய்கின்ற சிலவகைச் செலவுகள் உள்ளன. உதாரணமாக, விவசாயிகளுக்கு நன்மை செய்யக் கிணறு வெட்டத்தரும் மானியம், வேளாண்மைக் கருவிகளுக்கு அளிக்கும் உதவித்தொகை போன்றவற்றைக் கூறலாம்.

## வருவாயின் அடிப்படையில் பொதுச்செலவினைப் பாகுபடுத்தல்

பேராசிரியர் நிக்கல்சன் (Nicholson) பொதுச்செலவினால் அரசுக்கு கிடைக்கக் கூடிய வருவாயின் அடிப்படையில் பொதுச் செலவை நான்காகப் பகுக்கின்றார். அவையாவன:

### 01. நேரடியாக வருவாய் விளைவைத் தராத பொதுச்செலவு

அரசுக்கு நேரடியாக எந்த வருவாயும் கிடைக்காவிட்டாலும் அரசு செய்கின்ற பொதுச்செலவு இதிலடங்கும். ஏழை எளிய மக்களுக்குத் தருகின்ற உதவிகளை இவ்வகையினுள் சேர்க்கலாம். போர்ச்செலவு போன்றவை நேரடியாக அரசுக்கு இழப்பாக இருப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

### 02. மறைமுகமாக வருவாய் வழங்கும் பொதுச்செலவு

நேரடியாக வருவாய் வழங்காமல் காலப்போக்கில் மறைமுகமாக வருவாய் வழங்கக்கூடிய பொதுச்செலவுகள் இவ்வகையினுள் உள்ளடங்கும். உதாரணமாக, கல்விச் செலவைக் கூறலாம். அரசு கல்விக்குச் செலவிடுவதனால் உடனே அரசுக்கு வருவாய்

கிடைக்காமலிருக்கலாம். ஆனால் நீண்ட காலத்தில் படித்தவர்கள் வரி செலுத்தினால் அரசின் வருவாய் கூடும்.

### 03. நேரடியாகப் பகுதி வருவாய் தரும் பொதுச்செலவு

சிலவகைப் பொதுச்செலவுகளினால் அரசு ஓரளவு வருவாய் பெறுகின்றது. கட்டணம் பெற்றுக்கொண்டு அரசு அளிக்கும் மருத்துவக்கல்வி போன்றவற்றிற்கு அரசு செலவிடுவதை இந்தப் பிரிவில் சேர்க்கலாம்.

### 04. முழு அளவில் அல்லது ஆதாயமாக வருவாய் தரும் பொதுச்செலவு

அஞ்சல்துறை, போக்குவரத்து துறை போன்ற தொழில்கள் மீது அரசு செலவிடுகின்ற பணம் முழுவதும் சிலவேளைகளில் ஆதாயத்தோடு அரசுக்குத் திரும்ப கிடைக்கின்றது. இப்படிப்பட்ட செலவுகள் இந்த வகையைச் சார்ந்தவையாகும்.

## பணிகளின் அடிப்படையில் பொதுச்செலவினைப் பாகுபடுத்தல்

பேராசிரியர் ஆடம்ஸ் (Adams) அரசின் பணிகளின் அடிப்படையில் பொதுச்செலவினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கின்றார். அவையாவன:

### 01. பாதுகாப்புச் செலவு (Protective Expenditure)

புறத்தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவும், உள்நாட்டு அமைதியை நிலைநாட்டவும் அரசு செலவீடு செய்கின்ற பணம் இந்தப் பிரிவுக்குள் உள்ளடங்கும். அதுமட்டுமின்றி பாதுகாப்புத்துறை, காவல்துறை, நீதிமன்றம் போன்றவற்றுக்கான செலவீடுகளும் இதனுள் உள்ளடங்கும்.

### 02. வாணிபச் செலவு (Commercial Expenditure)

அரசு நாட்டில் வாணிபத்தைப் பேணவும், வளர்க்கவும் தொழில்கள், போக்குவரத்து ஆகியவற்றிற்குப் பணத்தைச் செலவிடுகின்றது. இத்தகைய செலவினங்கள் இந்தப் பிரிவில் அடங்கும்.

## 03. அபிவிருத்திச் செலவு (Development Expenditure)

அரசு நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கான பணிகளை மேற்க்கொள்கின்றது. கல்வி, சுகாதாரம், பொதுப்பணிகள் போன்ற துறைகளுக்கான செலவுகள் நாட்டின் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன. இத்துறைகள் மீது மேற்க்கொள்ளப்படும் செலவுகள் இதனுள் உள்ளடங்குகின்றது.

### விருப்ப, தேவைச் செலவுகளின் அடிப்படையில் பொதுச்செலவினைப் பாகுபடுத்தல்

ஜே.எஸ்.மில் (J. S. Mill) பொதுச்செலவுகளை "விருப்பச் செலவுகள்" (Optional Expenditure) என்றும் "கட்டாய அல்லது அத்தியாவசியமான செலவுகள்" (Obligatory or Necessary Expenditure) என்றும் பகுக்கின்றார். ஆடைட இன் கருத்துப்படி நாட்டின் தேவையை ஒட்டி அரசு தானே தீர்மானித்து விருப்பம் போல் ஏற்றுக்கொள்கின்ற செலவினங்கள் முதல் வகையான 'விருப்பச் செலவுகளில்' சேரும். பழைய ஒப்பந்தங்களின் அடிப்படையிலோ, சட்டத்தின் காரணமாகவோ கட்டாயம் செய்து தீரவேண்டிய செலவுகள் 'கட்டாயச் செலவுகளில்' அடங்கும் என்கின்றார்.

### முக்கியத்துவத்தின் அடிப்படையில் பொதுச்செலவினைப் பாகுபடுத்தல்

பேராசிரியர் பின்ட்லே சிர்ராஸ் (Findlay Shirras) பொதுச் செலவுகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் "முதன்மைச் செலவு" (Primary Expenditure) என்றும் "இரண்டாம் நிலைச் செலவு" (Secondary Expenditure) என்றும் பகுக்கின்றார். அவர், "அரசுகள் என்ற பெயருக்கு ஏற்றபடியுள்ள அரசுகள் ஒவ்வொன்றிற்கும் மேலாக ஏற்றுக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, கடனைச் செலுத்துதல் ஆகிய எல்லாச் செலவுகளும் முதன்மைச் செலவில் அடங்கும்" என்று விளக்குகின்றார். மற்றைய சமுதாய நலப்பணிகள், பொதுப்பணிகள், இதரப்பணிகள் ஆகியவற்றிற்கு ஏற்படும் செலவுகள் இரண்டாம் நிலைச் செலவுகளில் அடங்கும்.

## டால்டனின் பொதுச்செலவு தொடர்பான வகைப்படுத்தல்

டால்டன் பொதுச்செலவை “மானியங்கள்” (Grants) “கொள்வனவு விலை” (Purchase Price) என்று இருவகைகளாகப் பிரிக்கின்றார். “பொது நிர்வாகம் தன்னுடைய பணியாட்களுக்கு ஊதியமாகவும், கூலியாகவும் கொடுப்பதும், அமர்த்துகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு அளிப்பதும், வாங்கும் விலைகளாகும்”. மற்றொரு பக்கம் “முதியவர்களுக்கு அளிக்கும் உதவித்தொகை, பொதுவருவாயிலிருந்து சமுதாயக் காப்பீட்டுத் திட்டங்களுக்குச் செலுத்துதல் ஆகியவை மானியங்களாகும்.” என்று அவர் கூறுகின்றார். அரசு மாற்றாகப் பணியையோ, பொருளையோ பெற்றுக்கொண்டு செலவிடுவது கொள்வனவு விலையிலும், ஒரு கைமாறும் கருதாமல் செலவிடுவது மானியத்திலும் சேரும். இருவகைச் செலவுகளும் இணைந்து செல்வதைக் காணலாம். டால்டன் மானியத்தை “நேரடியானது” மற்றும் “மறைமுகமானது” என்றும் பிரிக்கின்றார்.

## உண்மையான, மாற்றுகின்ற செலவின் அடிப்படையில் வகைப்படுத்தல்

பேராசிரியர் பிகு (Pigou) பொதுச்செலவை “உண்மையான” (Real) அல்லது “மாற்றாத” (Non-Transfer) செலவு என்றும் “மாற்றுகின்ற” (Transfer) செலவு என்றும் பிரிக்கின்றார். அதாவது அரசு தனது வருவாயை உண்மையான பணிகளையும், பொருட்களையும் வாங்கப் பயன்படுத்துகின்றது. இத்தகைய செலவின் மூலம் தனியாரோடு போட்டியிடுகின்றது. இதனை உண்மைச் செலவு என்று கூறலாம். அதேபோல் அரசு உண்மையான சாதனங்களை வாங்காமல் ஒருவரிடமிருக்கும் சாதனங்களை மற்றவருக்கு மாற்றும் வகையில் பொதுச்செலவை மேற்கொள்ளலாம். இது மாற்றுகின்ற செலவாகும்.

## நிலையான மற்றும் மாறுகின்ற செலவின் அடிப்படையில் வகைப்படுத்தல்

பேராசிரியர் ஜே.கே.மேத்தா (J. K. Metha) பொதுச் செலவைப் பயனுள்ள வகைப்படுத்தலாக “நிலையான செலவு”

(Constant Expenditure) என்றும் “மாறுகின்ற செலவு” (Variable Expenditure) என்றும் இருவகைகளாகப் பிரிக்கின்றார். இந்த வகைப்படுத்தலுக்கு பொதுச்செலவின் இயல்பு அடிப்படையாகின்றது. மேத்தா இருவகைப் பொதுச்செலவுகளையும் விளக்குகையில் நிலையான செலவு என்பது எந்த மக்களின் நன்மைக்காகச் செலவிடப்படுகின்றதோ அந்த மக்கள் பெறுகின்ற பயனின் அளவினைச் சார்ந்திருக்காத செலவு தொகையாகும். பாதுகாப்பிற்காகச் செலவிடுவது இந்தவகைச் செலவுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இதனைப் போன்றே மாறுகின்ற செலவு என்பது எந்த மக்களின் நன்மைக்காகச் செலவிடப்படுகின்றதோ அவர்கள் பெறுகின்ற பொதுப்பணிகளின் பயன் கூடுகின்ற அளவுக்கேற்ப கூடுகின்ற செலவாகும். இதற்கு அஞ்சல் பணிகளுக்கு ஏற்படும் செலவு மாறுகின்ற செலவாகும். இவ்வாறாக அரச பொதுச் செலவானது பல்வேறு வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

## அரச பொதுச் செலவின் விளைவுகள்

வளர்ந்து வருகின்ற பொதுச் செலவானது அதன் அளவாலும், இயல்பாலும் மக்களின் பொருளாதார நலனில் பல்வேறு வகையில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இவ்விளைவானது சாதக விளைவு, பாதக விளைவு என இருவகைப்படுத்தப்படுகின்றது.

### சாதக விளைவுகள்

- பொதுச் செலவு சமுதாயத்திற்குள் கொள்வனவு சக்தியைக் கைமாற்றுகின்றது. ஒரு பகுதியினரிடமிருக்கும் கொள்வனவு சக்தியை அரசு வரி விதிப்பதன் மூலம் பெற்று பொதுச் செலவின் மூலம் சமுதாயத்தில் பிற்பகுதியினருக்குக் கிடைக்கச் செய்கின்றது. ஏழைகளின் நுகர்வு விருப்பம் மிகுதியாக இருக்கும் இதனால் பொருட்களின் தேவை கூடி உற்பத்தி உயரும்.

- பொதுச் செலவு மக்களின் திறன்களைப் பெருக்குகின்றது. அரசு மிகுதியாக கல்வி, சுகாதாரம், செய்தி, போக்குவரத்து

போன்றவற்றிற்கு செலவிடுவதால் மக்களின் ஆற்றல்கள் வளர்கின்றன. இவை மறைமுகமாக நாட்டின் செல்வ வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன.

- பொதுச் செலவு கூடுகின்ற போது நாட்டில் பல்வேறு பொருட்களுக்கும் பணிகளுக்கும் உள்ள தேவை கூடும். இதனால் நாட்டின் மொத்த பொருளாதார நடவடிக்கைகள் அதிகரிக்கும்.

- பொதுச் செலவானது நாட்டின் பொருளாதாரப் போக்கை மாற்றக்கூடியது. அதாவது அரசின் பொருளாதார நடவடிக்கைக்கும் மற்றைய துறைகளுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதால் பொதுச் செலவானது மொத்தப் பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

- பொதுச் செலவானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உற்பத்தியில் விளைவினை உண்டு பண்ணுகின்றது. அதாவது திரண்ட முதலீட்டுச் செலவுகளினால் நேரடியாக நாட்டில் உற்பத்தியானது அதிகரிக்கும் அதேவேளை தொழிற்கல்வி, சுகாதாரம், சட்டம் - ஒழுங்கு போன்றவற்றிற்கு செலவிடும் பணம் மறைமுகமாக உற்பத்தித் திறனைப் பெருக்கிக் காலப்போக்கில் நாட்டின் மொத்த உற்பத்தியைக் கூட்டுகின்றது.

- பொதுச் செலவைச் சரியான முறையில் மேற்கொண்டால் சமுதாயத்திலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைக்கலாம். ஏழைகளுக்கு உதவுகின்ற பல்வேறு வகையான பொதுச் செலவுகள் ஏற்றத்தாழ்வைக் குறைக்கின்றன. ஏழை எளியவர்களுக்கு இலவசக்கல்வி, மருத்துவ வசதிகளை அளித்தல், குடியிருப்புக்களை குறைந்த செலவில் அமைத்தல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் ஏழைகளின் உண்மை வருவாயை உயர்த்தி ஏற்றத்தாழ்வைக் குறைக்கும்.

- பொதுச் செலவானது வேலைவாய்ப்புக்களை உருவாக்கும். புதிய தொழில் முயற்சியின் காரணமாக நாட்டில்

வேலைவாய்ப்பு பெருகும் அவ்வாறு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதத்தில் பொதுச் செலவுகள் அமைய வேண்டும்.

### பாதக விளைவுகள்

- அரசு கடன் சுமைக்குள் அளவு கடந்த அரச செலவினால் தள்ளப்படும். அதுமட்டுமின்றி அரசு செலவுகளை மேற்க்கொள்ள ஏனைய நாடுகளில் உதவியை வேண்டி நிற்க வேண்டிய நிலை தோன்றும். இதனால் ஏனைய நாடுகளின் கீழ் தங்கி வாழும் நிலை தோன்றுவதுடன் தன்னிச்சையாக பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபட முடியாமல் ஏனைய நாட்டின் தலையீட்டின் கீழ் வாழ நேரிடும்.

- மக்கள் எப்பொழுதும் அரசினை எதிர்பார்த்தே அதனுடைய மானிய செயற்பாடுகளில் மட்டுமே தங்கி வாழும் நிலை தோன்றுவதால் மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையாமல் காணப்படுவர்.

- அரச செலவானது அரசவருமானத்தைக் காட்டிலும் அதிகரித்துச் செல்வதனால் நாடானது பொருளாதார ரீதியாகப் பின்னடைவை எதிர்நோக்கும். அதாவது பணவீக்கம் நாட்டில் ஏற்படும் அதாவது அரச செலவாகிய மானிய உதவிகள் அதிகரிக்க அதிகரிக்க வரிச்சுமை அதிகரிக்கும். இதனால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டு பொருட்களின் விலையில் அதிகரிப்பை ஏற்படுத்துவர் இது பணவீக்கத்திற்கு இட்டுச் செல்லும்.

### அரச பொதுச் செலவின் உலகளாவிய போக்கு

அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலேயே அரச பொதுச் செலவின் போக்கானது அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது கட்டமைப்பு ரீதியான சீராக்கல் செயற்பாடுகள் காரணமாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் அரச பொதுச் செலவானது அதிகமாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்

கல்வி, விவசாயம், உட்கட்டமைப்பு, சுகாதாரம் போன்ற நடவடிக்கைகளுக்காக அரசின் செலவானது அதிகரித்துக் காணப்படுகின்றது எனலாம். மொத்த அரச செலவில் ஆபிரிக்காவில் விவசாயம், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு மீதான செலவின் பங்கு உயர்வாகக் காணப்படுகின்றது. அதேபோல ஆசியாவில் சுகாதாரம் மற்றும் விவசாயம் மீதான செலவீடே அதிகமாகும்.

உலகளாவிய அடிப்படையில் நோக்கும் போது 1960ம் ஆண்டிற்கு பின்னர் அரச பொதுச் செலவானது அதிகரித்துச் சென்று 2009ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச செலவானது 17.80 வீதமாக உயர்ந்த போக்கினைக் கொண்டிருந்தது. பின்னர் அடுத்து வந்த காலகட்டங்களில் அரச பொதுச் செலவானது படிப்படியாகக் குறைவடைந்து கொண்டு வருகின்றது. அந்தவகையில் 2015ம் ஆண்டில் 17.02 வீதமாகவும் 2016ம் ஆண்டில் 17.01 வீதமாகவும் 2017ம் ஆண்டில் 16.84 வீதமாகவும் உலகளாவிய அடிப்படையில் குறைவடைந்து காணப்படுகின்றது. இவ்வாறாக அரசின் நலன்சார் கொள்கைகள், தற்காலப் போர்முறைகள், மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகரமயமாக்கல் செயற்பாடுகள், விலைவாசி ஏற்றம், குடியாட்சி கவர்ச்சி, அரசியல் ஆதிக்கம், அறிவியல் வளர்ச்சி போன்ற பல்வேறு காரணிகளின் காரணமாக உலகளாவிய ரீதியில் அரச செலவில் பாரிய மாற்றங்கள் தற்போது இடம் பெற்று வருகின்றன எனலாம்.

தென்னாபிரிக்கா, பேரூ, நேபாளம், இத்தாலி, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் நேபாளம் 2006ம் ஆண்டு காலப்பகுதியோடு ஒப்பிடுமிடத்து பாரிய வீழ்ச்சி போக்கை அடைந்து முதலாம் இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. தற்போது 2017ம் ஆண்டில் தென்னாபிரிக்காவே அதிகூடிய அரச பொதுச் செலவைக் கொண்ட நாடாக இவ் நாடுகளின் மத்தியில் காணப்படுகின்றது. இவ்வாறாக ஒட்டு மொத்தமாக நோக்குகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச செலவானது குறைவடைந்து கொண்டு வருகின்றது எனலாம்.

## இலங்கையில் அரச பொதுச் செலவின் போக்கு

இலங்கையைப் பொறுத்தவரையில் அமைப்பு ரீதியான காரணிகள், அரசியல் கொள்கை மாற்றங்கள், வெளிநாட்டு அதிர்ச்சிகள் போன்ற பல்வேறு காரணிகள் இலங்கையின் அரச பொதுச் செலவின் போக்கில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தாராளமயமாக்கல் கொள்கை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையிலிருந்து இலங்கையின் அரச செலவின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. அதாவது மூடியபொருளாதாரம் காணப்பட்ட வேளையில் இறக்குமதி சார் செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன எனினும் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக இறக்குமதிச் செலவுகள் ஏற்றுமதியைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டு தற்காலத்தில் பாதீட்டுப் பற்றாக்குறையை ஏற்படுத்துமளவிற்கு முன்னேறியுள்ளது.

அதுமட்டுமின்றி 1971ம் ஆண்டில் ஏற்பட்ட JVP கிளர்ச்சியானது நாட்டின் உற்பத்தி இயலளவைப் பெருமளவில் பாதித்ததுடன் அரசாங்கமானது பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு பெருமளவிலான பணத்தினை செலவிட்டது. 1977ம் ஆண்டின் பின்னர் விரிவான உணவு மானியம் நீக்கப்பட்டு வருமானம் குறைந்த மக்களுக்கு உணவு முத்திரை வழங்கப்பட்டது. இது அரச செலவில் தாக்கம் செலுத்தியது எனலாம். 1978ம் ஆண்டில் அரச பொதுச் செலவானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.48 வீதமாகக் காணப்பட்டது. இது 1979ம் ஆண்டில் 9.16 வீதமாகவும் 1980ம் ஆண்டில் 8.55 வீதமாகவும் 1981ம் ஆண்டில் 7.42 வீதமாகவும் படிப்படியாக சிறிய அளவில் குறைவடைந்த போக்கைக் கொண்டிருந்தது. பின்னர் 1982ம் ஆண்டிற்கு பிறகு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச செலவானது முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுமிடத்து அதிகரித்தது எனலாம்.

மேலும் 1980ம் ஆண்டுகளைத் தொடர்ந்து JVP, LTTE ஆகிய குழுக்களின் தோற்றம் காரணமாக இலங்கையில் அரச செலவில் மேலும் சிறியதொரு அதிகரிப்பு நிலை தோன்றியது. அதாவது 30 வருடகால யுத்தத்தின் போது போர் ஆயுதங்கள் கொள்வனவு செய்தல், போராளிகளுக்கான மருத்துவ செலவுகள் என நாட்டின்

அரச செலவானது அதிகரிக்கத் தொடங்கியது. 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டின் முற்பகுதி வரை அரச செலவானது 1995 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட அரச செலவினுடைய போக்கினை விடவும் உயர்நிலையை வகித்தமையைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது 1995 ஆம் ஆண்டில் ஏனைய காலப்பகுதியை விடவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச பொதுச் செலவானது 11.47 வீதமாகக் உயர்நிலையில் காணப்பட்டதோடு இதன் உச்சநிலைப்போக்கு படிப்படியாக அதிகரித்து 2009ம் ஆண்டில் பாரியதொரு அதிகரிப்பு நிலையை உண்டு பண்ணியது. இக்காலப்பகுதியில் அரச பொதுச் செலவானது 17.61 வீதமாகக் காணப்பட்டது. 1995ம் ஆண்டில் 11.47 வீதமாகக் காணப்பட்ட அரச பொதுச் செலவு 1996ம் ஆண்டில் 10.55 வீதமாகவும் 1997- 2009ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முறையே 10.36 வீதம், 9.8 வீதம், 9.03 வீதம், 10.51 வீதம், 10.26 வீதம், 12.72 வீதம், 12.16 வீதம், 12.63 வீதம், 13.09 வீதம், 15.36 வீதம், 15.27 வீதம், 16.18 வீதம், 17.61 வீதமாகவும் அரச பொதுச் செலவின் போக்கு காணப்பட்டது. அதாவது தொடர்ந்து வந்த போர்க்குழப்பநிலைகள், சுனாமி அனர்த்தம் போன்ற அனர்த்தங்களால் அரச செலவானது அதிகரித்துக் காணப்பட்டாலும் 2009 ஆம் ஆண்டு யுத்தமானது முடிவிற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச செலவானது குறைவடைந்தது. எனினும் 2015ம் ஆண்டில் யுத்த காலப்பகுதியோடு ஒப்பிடுமிடத்து அரச பொதுச் செலவானது அதிகமாகக் காணப்பட்டது.

அதாவது 2015ம் ஆண்டு இலங்கை வரலாற்றிலே அரச செலவை முகாமைத்துவம் செய்வதில் ஒரு சவால் மிக்க ஆண்டாகக் கருதப்படுகின்றது. இதற்கு காரணமாக இலங்கையரசு இரு வகையான தேர்தல் முறைமைகளை எதிர்நோக்கியமையேயாகும். அந்தவகையில் 2014ம் ஆண்டில் இலங்கையின் மொத்த அரச பொதுச்செலவானது ரூபா. 869138 மில்லியனாகும். ஆனால் 2015ம் ஆண்டில் இலங்கையரசின் மொத்த அரச பொதுச்செலவானது ரூபா. 985815 மில்லியனாக அதிகரித்தது. அதுமட்டுமின்றி 2015ம் ஆண்டில் மொத்த அரசவருமானம் ரூபா. 1689 பில்லியனாகும். ஆனால் மொத்த அரச செலவானது ரூபா. 2210 பில்லியனாகும். இவ்வாறாக வருமானத்தை விட செலவு கூடிய ஆண்டாக 2015ம் ஆண்டு காணப்படுகின்றது. 2014ம் ஆண்டில் ரூபா. 486.6

பில்லியனாகவும் 2015ம் ஆண்டில் ரூபா. 602.8 பில்லியனாகவும் 23.9 விகிதத்தால் அரச முதலீடு அதிகரித்துள்ளது. இவ்வாறு அதிகரித்தமைக்கு காரணம் அரசு கல்வி, சுகாதாரம், பாதைகள், நீர்ப்பாசனம், நீர்முகாமைத்துவம், நீர்வழங்கல், துப்பரவேற்பாடு போன்றவற்றின் மீதான முதலீடு அதிகரிப்பினால் அரச செலவீடும் அதிகரித்துள்ளது. ஓய்வுதியக் கொடுப்பனவுகள் 2014ம் ஆண்டில் ரூபா. 127 பில்லியனிலிருந்து 2015ம் ஆண்டில் ரூபா. 156.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. நலன்புரிச் செலவினம் 2014ம் ஆண்டில் ரூபா. 87.8 பில்லியனிலிருந்து 2015ம் ஆண்டில் ரூபா. 144.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. அரசாங்க செலவினம் 2014ம் ஆண்டில் 17.2 வீதமாகவும் 3.3 வீதத்தால் 2015ம் ஆண்டில் 20.5 வீதமாக அதிகரித்துள்ளது.

அதேபோல் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, வட்டிக்கொடுப்பனவுகள், உதவித்தொகை மற்றும் மாற்றல்களின் அதிகரிப்பால் 2014ம் ஆண்டில் 12.7 வீதத்திலிருந்து 2015ம் ஆண்டில் 15.2 வீதமாக மீண்டெழும் செலவீனம் அதிகரித்துள்ளது. அதேபோல் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் 2014ம் ஆண்டில் 4.5 வீதத்திலிருந்து 2015ம் ஆண்டில் 5.3 வீதமாக அதிகரித்துள்ளது. வட்டிக்கொடுப்பனவுகள் 2014ம் ஆண்டில் 4.2 வீதத்திலிருந்து 2015ம் ஆண்டில் 4.7 வீதமாக அதிகரித்துள்ளது. உதவித்தொகை மாற்றல்கள் 2014ம் ஆண்டில் 2.5 வீதத்திலிருந்து 2015ம் ஆண்டில் 3.5 வீதமாக அதிகரித்துள்ளது. அரசாங்க ஊழியருக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2014ம் ஆண்டில் ரூபா. 441 பில்லியனிலிருந்து 2015ம் ஆண்டில் 27.4 சதவீத அதிகரிப்பால் ரூபா. 561.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதற்கமைவாக மொத்த அரசாங்க செலவினம் 2014ம் ஆண்டில் ரூபா.1795.9 பில்லியனிலிருந்து 2015ம் ஆண்டில் ரூபா. 2290.4 பில்லியனாக 27.5 வீதத்தால் விரிவடைந்துள்ளது. இது ரூபா. 1701.7 பில்லியன் மீண்டெழும் செலவினத்தையும் ரூபா.588.7 பில்லியன் மூலதனச் செலவினத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறாக இலங்கையில் அரசியல் இலாபம், வயது முதிர்ந்தோர் சனத்தொகை அதிகரிப்பு, இயற்கைப் பேரழிவுகள், போர்ச்சூழல், அதிகரித்த கல்வி நடவடிக்கைகள், சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள், வீதிப்புனரமைப்புத் திட்டங்கள், நீர்பாசன

நடவடிக்கைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் இலங்கையில் அரச பொதுச் செலவானது அதிகரித்த போக்கைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. அதாவது அரசியல் செல்வாக்கு காரணமாக 2014ம் ஆண்டில் இல் அரச பொதுச் செலவானது ரூபா. 869138 மில்லியனாகவும் 2015ம் ஆண்டில் ரூபா.985815 மில்லியனாகவும் 2016ம் ஆண்டில் ரூபா. 1015106.70 மில்லியனாகவும் 2017ம் ஆண்டில் ரூபா. 1130674 மில்லியனாகவும் அதிகரித்த போக்கிலேயே இன்று வரையில் அரச செலவின் போக்கானது காணப்படுகின்றது.

நுகர்வு, முதலீட்டுச் செலவில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக 2016ம் ஆண்டில் மொத்த உள்நாட்டுச் செலவினம் 8.5 வீதத்திலிருந்து 2017ம் ஆண்டில் 11.5 வீதமாக விரிவடைந்து ரூபா. 14247.7 பில்லியனாகக் காணப்பட்டது. அதாவது 2016ம் ஆண்டில் 3.1 வீதத்தால் வளர்ச்சியடைந்த நுகர்வுச் செலவினம் 2017ம் ஆண்டில் 9.0 சதவீதத்தினால் வளர்ச்சியையும் முதலீட்டுச் செலவினம் 2016ம் ஆண்டில் 22 வீதத்திலிருந்து 2017ம் ஆண்டில் 16.6 வீதமாக வீழ்ச்சியடைந்தமை போன்றவற்றின் காரணமாகவே மொத்த உள்நாட்டுச் செலவினம் விரிவடைந்தது எனலாம்.

யுத்த காலப்பகுதியில் அதிகூடிய பாதுகாப்புச் செலவால் அதிகரித்திருந்தாலும் தற்போது அரசியல் தந்திரோபாய செயற்பாடுகள் மற்றும் அளவு கடந்த இறக்குமதி போன்ற காரணங்களினால் இன்றைய காலகட்டம் வரை அரச செலவானது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது எனலாம். இவ்வாறாக அதிகரித்த போக்கைக் கொண்டதாக இலங்கை அரசினுடைய செலவானது காணப்படுகின்றது எனலாம்.

அந்தவகையில் இக்கட்டுரையானது அரச பொதுச்செலவின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு வகைகள் பற்றி குறிப்பிடுவதுடன் அரச செலவானது மக்களது பொருளாதார நலனில் எவ்வாறான பாதக, சாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது எனவும் ஆராய்கின்றது. மேலும் உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் அரச செலவினது போக்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

## உசாத்துணைகள்

*குருசாமி மா. பா (2004), பொதுநிதி, குரு-தேமொழி தாயன்பகம்*

*Sundharam K. P. M & Andley K.K (2001) Public Finance- Theory and Finance, S. Chand & Company Ltd.*

*Bhatia H L (2008) Public Finance, Vikas Publishing House Pvt Ltd.*

*https://databank.worldbank.org/home.aspx retrieved on 28.8.2019.*

*https://www.cbsl.gov.lk/retrived on 28.8.2019.*

# ஜிக் பொருளாதாரம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

**ஜெயரஞ்சன் பிரஷீனா**[5]

## அறிமுகம்

ஜிக் பொருளாதாரம் என்ற பதம் தொழில் வழங்குநருக்கும் ஊழியர்களுக்குமிடையில் காணப்படும் பாரம்பரிய தொழில் ஏற்பாடுகளுக்கு மாறாக தொழிற் சந்தையில் சுயமான தொழிலாளர்கள் அல்லது சுயாதீனமான ஒப்பந்தக்காரர்கள் (ஜிக் வேலையாட்கள்) பரந்தளவிற்குக் காணப்படுகின்ற பொருளாதாரமொன்றினைப் குறிக்கிறது. ஜிக் என்ற சொல் பொதுவாக இசைக்கலைஞர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஜிக் நடவடிக்கைகளுக்கான மிகப் பொதுவான உதாரணங்களாக தனிப்பட்ட சுயாதீன ஒப்பந்தகாரர்கள், திட்ட அடிப்படையிலான தொழிலாளர்கள் தற்காலிக அல்லது பகுதிநேர பணியமர்த்தல் என்பனவற்றை கூறலாம்.

ஜிக் பொருளாதாரம், நெகிழ்ச்சித் தன்மையினை வழங்குவதன் மூலமும் வாடிக்கையாளருக்கும் தொழிலாளர்களுக்கு இடையேயான சமச்சீரற்ற தகவல்களைக் குறைப்பதன் மூலமும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதனூடாக தற்போதுள்ள பணி விநியோக மார்க்கங்களுக்கு புதிய வடிவமைப்பொன்றினைத் தோற்றுவிக்கின்றது. தொழிலாளர்கள் வரையறைகளற்ற வருவாய்களுடன் கூடிய வேலை நேரங்களின் நெகிழ்ச்சித்தன்மை, சுலபமான சமச்சீரான வாழ்க்கைமுறை என்பனவற்றினை ஜிக் ஒப்பந்தங்கள் வழங்குவதன் காரணமாக அதற்கு முன்னுரிமையளிக்கின்றனர். மேலும், டிஜிட்டல் தளங்கள், குறிப்பாக, செல்லிடத் தொலைபேசிச் செயலி பெரும்பாலும் உடனடியாகவே வேலையாட்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே காத்திரமான பொருத்தப்பாடொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் வேலையாட்கள் உத்தம அளவிலான பணிகளைப்

---

[5] உதவி விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

பொறுப்பேற்கவும் மிகப் போட்டித்தன்மை வாய்ந்த வீதங்களில் சேவைகளை வழங்கவும் அவற்றினை அனுமதிக்கிறது. மேலும், டிஜிட்டல் தளங்கள் தற்பொழுது கிரமமான தொழில்களிலுள்ள வேலையாட்கள் பகுதி நேர அடிப்படையில் மேலதிகத் தொழில்களைப் பார்ப்பதற்கான வசதிகளையும் வழங்குகிறது.

அதிகரித்து வருகின்ற பிரபல்யத்தன்மைக்கு மத்தியிலும் ஜிக் பொருளாதாரம் வாய்ப்புக்களை வழங்குவது மட்டுமன்றி, ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல், அரசிறைச் சேகரிப்புக்கள் மற்றும் குறிப்பாக, அலுவல்சார் புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் என்பன தொடர்பில் சவால்களைத் தோற்றுவித்து வருகிறது. அமைப்பியல் முறையிலுள்ள நிறுவனங்களில் தொழில்புரியும் ஆட்களை முக்கியமாக இலக்காகக் கொண்டு தொழிலாளர் உரிமைகளையும் நலன்புரிகளையும் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்ட தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் விமர்சனத்திற்குள்ளாகி வருவதுடன் ஜிக் வேலையாட்கள் அத்தகைய ஏற்பாடுகளின் மூலமாக போதுமானளவிற்கு உள்ளடக்கப்படாமல் இருக்கலாம் என்பதனால் ஜிக் பொருளாதாரத்தின் பின்னணியில் இதனை மீளாய்வு செய்யும் தேவை காணப்படுகின்றது.

இதேபோன்று, ஜிக் தளங்கள் குறிப்பிட்ட நாடொன்றினைத் தளமாகக் கொண்டிருந்த போதும், இது உலகளாவிய ரீதியில் தொழிற்படுவதனால் அனுசரனை வழங்கும் நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலையின் கீழும் மற்றும் உள்நாட்டு வியாபாரப் பதிவு இல்லாமல், வரி விதிப்பு முறைமையினையும் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். மாறாக, உள்நாட்டுத் தளங்கள் ஒழுங்குமுறைப்படுத்தலின் நுணுக்கமான பார்வைக்குட்பட்டிருப்பதனால் உள்நாட்டு வரிகளைச் செலுத்த அது பொறுப்புடையதாக இருக்கும். ஒழுங்குவிதிகளைப் பிரயோகிப்பதில் காணப்படும் அத்தகைய வேறுபாடுகள் உள்நாட்டுத் தொழிற்பாட்டாளர்களுக்கு தொழில்புரிவதற்குச் சமமான வாய்ப்புக்களை வழங்குவதனை உறுதிப்படுத்தாது.

### ஜிக் பொருளாதாரம் நோக்கிய நகர்விற்கான காரணங்கள்

- பணத்தைத் தவிர ஜிக் பொருளாதாரத்தை நோக்கி இளைஞர்களை ஈர்த்த மிக முக்கியமான காரணி சுதந்திரம்.

அவர்கள் தங்கள் வேலைகளில் அதிக நெகிழ்வுத்தன்மையையும் அதிக சுதந்திரத்தையும் விரும்புகிறார்கள். ஜிக் தொழிலாளர்களாக அவர்கள் தங்கள் வேலைகள் மீது அதிக கட்டுப்பாட்டை அனுபவிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் செய்ய விரும்பும் வேலையைத் தேர்ந்தெடுப்பதில் அதிக சுதந்திரமும் அடைகின்றனர். பாரம்பரிய வேலைவாய்ப்பில் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட மணிநேரங்களுக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது அதேசமயம் ஜிக் பொருளாதாரத்தில் அவர்கள் ஒப்பீட்டளவில் அதிக நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுள்ளனர் அங்கு அவர்கள் விரும்பும் வரை அவர்கள் வேலை செய்ய முடியும். மேலும் புதிய திறன்களைக் கற்கவும் புதிய வழிகளை ஆராயவும் விரும்பும் மக்கள் ஜிக் பொருளாதாரத்தில் சிறந்த புதிய வாய்ப்புகளைக் காணலாம். புதிய மற்றும் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களுக்கு இது நல்லது. சிலருக்கு இது கூடுதல் பணம் சம்பாதிக்கும் ஒரு முறை மட்டுமே. அவர்கள் மற்ற வழக்கமான வருமான ஆதாரங்களைக் கொண்டிருக்கலாம் ஆனால் அவர்களுக்கு திறன்கள் இருப்பதால் அவர்கள் ஜிக் தொழில்கள் மூலம் கூடுதல் வருமானத்தை ஈட்ட முடியும்.

- இளம் தொழிலாளர்களை பொறுத்தவரையில் தங்கள் விருப்பப்படி நியாயமான கொடுப்பனவுகளுடன் வேலைகளைக் காணலாம். அதே சமயம் தொழிலாளர்கள் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ள கூடிய ஒரு தளமாகவும் இது விளங்குவதனால் பெரும்பாலான இளம் தொழிலாளர்களை இது ஈர்க்கிறது. உதாரணமாக ஜிக் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை பேணுவதன் மூலமாக அவர்களின் தொடர்பாடல் திறன் விருத்தி அடைவதுடன் அவர்களின் பணி அட்டவணையை கட்டமைப்பதன் மூலம், அவர்கள் நேர முகாமைத்துவ திறன்களும் விருத்தி அடையும்.

ஜிக் பொருளாதாரம் வழங்கிய நன்மைகளாக அதிக சுயாட்சி, நெகிழ்வுத்தன்மை மற்றும் பல்வேறு வகைகளில் இருந்து பெரிய அளவிலான வேலைவாய்ப்பு மற்றும் வணிகங்களுக்கான செலவு

நன்மைகளாக இவை இருப்பினும் இது நாணயத்தின் ஒரு பக்கம் மற்றும் அதே படத்தின் மற்றொரு அம்சமும் உள்ளது.

## ஜிக் பொருளாதாரம் நோக்கிய நகர்வை தடுக்கும் காரணிகள்

- ஜிக் பொருளாதாரம் இணக்கம் மற்றும் தொழிலாளர் நன்மைகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் தொழில் மேலாண்மை மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்பான கேள்விகளைப் பெற்றுள்ளது.

- ஜிக் பொருளாதாரம் பாரம்பரிய பிரிவில் வராத வேலைகளை உருவாக்கியுள்ளது. அதனால்தான் இது சர்ச்சைகள் மற்றும் சட்ட மோதல்களுக்கும் வழிவகுக்கும். ஜிக் தொழிலாளர்களின் உரிமைகள் பாரம்பரிய ஊழியர்களைப் போல வரையறுக்கப்படவில்லை. ஒரு ஜிக் தொழிலாளியின் ஒப்பந்தங்கள் மற்றும் சட்ட வரையறை நாட்டிற்கு நாடு மற்றும் சந்தைக்கு சந்தை மாறுபடும். ஜிக் தொழிலாளர்களின் சட்ட உரிமைகள் சரியாக வரையறுக்கப்படாத சந்தர்ப்பங்களில் பாகுபாடு மற்றும் முரண்பாடு ஏற்படலாம். அக்டோபர் 2016 இல் இங்கிலாந்தில் உள்ள Uber ஓட்டுநர்கள் சுயாதீன ஒப்பந்தக்காரர்களாக இல்லாமல் தொழிலாளர்கள் என வகைப்படுத்தும் சட்டப் போரில் வெற்றி பெற்றனர்.

- பாரம்பரிய நன்மை மாதிரி வழக்கமான பணியாளருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவனக் கொள்கைகளும் ஊழியர்களுக்கு சாதகமாக இருக்கின்றன. வழக்கமான ஊழியர்களைப் போலவே அதே சலுகைகளுக்கு உரிமை இல்லாத ஜிக் தொழிலாளர்களின் வாழ்க்கையில் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். ஒருபுறம் இது முதலாளிகளுக்கு நன்மை அளிக்கிறது, செலவுகளை மிச்சப்படுத்துகிறது. மறுபுறம் ஜிக் தொழிலாளர்கள் பாகுபாடு காட்டப்படுவதைப் போல உணர முடியும். ஜிக் தொழிலாளி நட்பு கொள்கைகளின் பற்றாக்குறையை உணர முடியும் ஏனெனில் அவருக்கு வழக்கமான ஊழியர்களைப் போன்ற பிற சலுகைகள் கிடைக்காது.

- ஜிக் தொழிலாளர்கள் முதலாளிகளுடன் குறுகிய கால உறவுகளில் உள்ளனர் எனவே ஒரு திட்டவட்டமான தொழில் இல்லை. அதிக திறமையான தொழிலாளர்கள் சிறந்த பாதுகாப்பைக் காணலாம் குறைந்த திறமையான தொழிலாளர்கள் பெரும்பாலும் பொருத்தமான நிகழ்ச்சிகளையும் நிலையான வேலைவாய்ப்பையும் பெறுவது கடினம். ஒரு ஜிக் தொழிலாளி எப்போதுமே ஒரு திட்டமிட்ட நகர்வை மேற்கொள்வதில்லை அல்லது பாரம்பரிய தொழிலாளியாக நிலையான தொழில் இல்லை. மேலும் பாரம்பரிய ஊழியர்களைப் போலவே அவர்களுக்கு தொழில் மேலாண்மை அல்லது செயல்திறன் மதிப்பாய்வு தொடர்பான எந்த ஆதரவும் இல்லை. ஜிக் தொழிலாளியின் மீது முழு சுமையும் உள்ளது. எனவே ஜிக் தொழிலாளி ஒருவர் மிகவும் அர்ப்பணிப்பு மற்றும் அதிக உந்துதல் கொண்டவராக இல்லையென்றால் ஜிக் தொழிலாளர்கள் சில நேரங்களில் சீரற்ற தன்மை, முழுநேர வேலை இல்லாதது மற்றும் நிலையான கால அட்டவணைகள் ஆகியவற்றைக் கண்டறிவதில் சிரமப்பட வேண்டியிருக்கும் இது அவர்களுக்கு உளவியல் ஆரோக்கியத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும்.

- ஜிக் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தேவை அதிகமாக இருக்கும் போது தொழிலாளர்கள் தங்கள் உடல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தை அனுமதிப்பதை விட அதிக வேலைகளைச் செய்ய முடிகிறது.

  இது குறுகிய மற்றும் நீண்ட காலங்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். சில உளவியலாளர்கள் இதை மெதுவான விபத்து என்று அழைக்கின்றனர். அங்கு வேலை பாதுகாப்பின்மை, குறைந்த ஊதியம் மற்றும் தனிமை ஆகியவை மன அழுத்தத்தின் தருணங்களை ஏற்படுத்தும்.

- நிறுவனங்களுக்குள் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு மாதிரிகள் வழக்கமான ஊழியர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றன. ஜிக் தொழிலாளர்கள் அத்தகைய ஆதாரங்கள் அவர்களிடம் இல்லை. அவர்கள் சுய பயிற்சி

முறைகளை மட்டுமே கண்டுபிடிக்க முடியும் மற்றும் அவர்களின் வாழ்க்கையை நிர்வகிப்பது அவர்களின் சொந்த சுமையாகும். நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. இருப்பினும் இந்த வாய்ப்புகள் ஜிக் தொழிலாளர்களுக்கு கிடைக்கபடுவதில்லை.

அவர்களின் திறன் வளர்ச்சியைக் கவனித்துக்கொள்ள அல்லது தொழில் மேலாண்மை குறித்து ஆலோசனை வழங்க மனிதவள மேலாளர்கள் இல்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஜிக் தொழிலாளர்கள் தங்கள் மட்டுப்படுத்தப்பட்ட திறன்களைச் செய்ய வேண்டும் மற்றும் புதிய திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். மேலும் ஜிக் தொழிலாளர்களுடன் தொடர்பு மற்றும் ஈடுபாடும் கடினம். சில நிறுவன விதிகள் பொருந்தினாலும் வழக்கமான ஊழியர்களுக்கு பொருந்தும் நிறுவன மதிப்புகள் அவர்களுக்கு பொருந்தாது. உள் ஊழியர்களுடன் தொடர்புகொள்வது எளிதானது ஆனால் ஜிக் தொழிலாளர்கள் விடயத்தில் அவ்வளவு எளிதானது அல்ல. உங்கள் வழக்கமான ஊழியர்களுடன் நீங்கள் நேருக்கு நேர் தொடர்பு கொள்ளலாம் மற்றும் புதிய மற்றும் சிறந்த முறைகளைப் பயன்படுத்தி அவர்களை ஈடுபடுத்தலாம் ஆனால் ஜிக் தொழிலாளர்களிடம் வரும்போது ஒரு இடைவெளி எப்போதும் இருக்கும் ஏனெனில் அந்த உறவு மிகக் குறுகிய காலம் தான்.

## முடிவுரை

ஜிக் தொழிலாளர்களுக்கு வாழ்க்கை என்பது எளிதானது அல்ல. ஜிக் பொருளாதாரம் உலக அளவில் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது ஆனால் ஒவ்வொரு ஜிக் தொழிலாளியும் மகிழ்ச்சியாகவும் திருப்தியுடனும் இல்லை. அவர்களுக்கு ஜிக் பொருளாதாரம் அதிக சுயாட்சி மற்றும் நெகிழ்வுத்தன்மையைக் கொண்டு வந்துள்ளது. இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நல்லது ஆனால் பாரம்பரிய ஊழியர்களுக்கு கிடைத்த பல நன்மைகள் ஜிக் தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை. வணிக

முகாமையாளர்கள் தங்கள் ஜிக் தொழிலாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப அவர்களின் பணிகள் மற்றும் தொகுப்புகளை வடிவமைக்க வேண்டும். அவர்கள் ஒரு மனிதவள தொடர்பு புள்ளியை உருவாக்க வேண்டும். மேலும் ஆலோசகர்களை பணியமர்த்துவதன் மூலம் சட்ட மற்றும் வரி தாக்கங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். இப்போது ஜிக் தொழிலாளர்களும் பணியாளர்களில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர் எனவே அவர்களின் ஒருங்கிணைப்பும் நிறுவனங்களின் மையமாக இருக்க வேண்டும். இருப்பினும். ஜிக் தொழிலாளர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் ஏனெனில் ஜிக் பொருளாதாரத்தில் வெற்றியின் வரையறைகளும் மாறிவிட்டன. அவர்கள் நெகிழ்வுத்தன்மை மற்றும் கிடைக்கும் தன்மைக்கு இடையில் ஒரு சமநிலையைக் கண்டறிய வேண்டும். ஒருபுறம் சுயாட்சி நம்பிக்கையைத் தூண்டுகிறது தடுமாற்றங்களும் பெருகும் இறுதியில் வளர்ந்து வரும் தனிமை உணர்வும் நீங்கள் தாங்கக்கூடியதை விட அதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.

இலங்கையை பொறுத்த வரையில் தளங்களை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்துப் பகிர்வுப் பணிகள் மற்றும் தங்குமிட வசதிப் பணிகள் போன்ற சில ஜிக் பொருளாதார நடவடிக்கைகள் அண்மைய ஆண்டுகளில் தோற்றம்பெற்று வருகின்றன. மேல் மாகாணத்திலும் ஏனைய நகர்ப்புறங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களிலும் வாழுகின்ற ஆட்களில் கணிசமான எண்ணிக்கையினர் வீதியோரங்களில் காத்திருப்பதற்குப் பதிலாக வாடகை ஊர்திகளை அல்லது பார ஊர்திகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள செல்லிடத் தொலைபேசிச் செயலிகளைப் பயன்படுத்துகின்றனர். காலப்போக்கில் ஜிக் பொருளாதாரம் படிப்படியாக கிராமிய சமூகத்தினரையும் சென்றடையும். பண்ணைப் பொறிகளைப் பகிர்ந்து கொள்வதனைக் கூட உள்ளடக்கும் விதத்தில் ஜிக் பொருளாதார நடவடிக்கை விரிவடைவதற்கான உள்ளார்ந்த வளம் அங்கே காணப்படுகின்றது.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஜிக் பொருளாதார நடவடிக்கை அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதன் நடவடிக்கைகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருக்கின்ற போதும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட உலகில் ஜிக் பொருளாதாரம் விரைந்து வளர்ச்சியடைந்துவரும் துறையாக

இருப்பதனால் அதனைக் கண்காணிப்பது நிச்சயமாக நன்மை பயப்பதாக இருக்கும்.

### *உசாத்துணைகள்*

*Friedman, G., 2014. Workers without employers: shadow corporations and the rise of the gig economy. Review of Keynesian Economics, 2(2), pp.171-188.*

*Donovan, S.A., Bradley, D.H. and Shimabukuru, J.O., 2016. What does the gig economy mean for workers?.*

*Central Bank of Sri Lanka, 2019. Annual Report 2019.*

*Graham, M., Hjorth, I. and Lehdonvirta, V., 2017. Digital labour and development: impacts of global digital labour platforms and the gig economy on worker livelihoods. Transfer: European Review of Labour and Research, 23(2), pp.135-162.*

# சர்வதேச வர்த்தகம்

**கணேசன் சுகன்யா**[6]

## அறிமுகம்

சர்வதேச வர்த்தகம் என்பது நாடுகளுக்கிடையில் பொருட்கள், சேவைகளைப் பரிமாற்றிக் கொள்வதாகும். சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடும் நாடுகள் பல விதமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் முலம் குறிப்பிட்ட பொருள் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியினைக் கொண்ட நாடுகள் அதிகளவிலான பொருள் உற்பத்தியில் ஈடுபட ஏதுவாக உள்ளதுடன் பரிமாற்றத்தின் ஊடாக அதிக பொருட்களைப் பெறவும் வழிவகுக்கின்றது. இதனுாடாக நுகர்வின் அளவும் வாழ்க்கைத் தரமும் அதிகரிக்கும்.

## சர்வதேச வர்த்தகம்

குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கும் உலக நாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்படும் வியாபாரம் சர்வதேச வியாபாரம் எனப்படும்.

## ஏற்றுமதி வர்த்தகம்

குறிப்பிட்ட ஒரு நாடு உலக நாடுகளுக்கு பொருட்களையும் சேவைகளையும் விற்பனை செய்தல் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். ஏற்றுமதி பின்வரும் இரு வகைகளை உள்ளடக்கியிருக்கும்.

---

[6] உதவி விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

1. கட்புலனாகும் ஏற்றுமதி: கண்ணால் பார்க்கக்கூடிய, தொட்டு உணரக் கூடிய பொருட்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படல்.

Eg: விவசாயப் பொருட்கள் - தேயிலை

கைத்தொழில் பொருட்கள் - தைத்த ஆடை

கனியப் பொருள் - இரத்தினக்கல்

பாகுபடுத்தப்படாதவை

2. கட்புலனாகா ஏற்றுமதி: கண்ணால் பார்க்க முடியாத, தொட்டு உணர முடியாத சேவைகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படல்.

Eg: வெளிநாட்டு வேலைவாய்ப்பு

### இறக்குமதி வர்த்தகம்

குறிப்பிட்ட ஒரு நாடு உலக நாடுகளிலிருந்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல் இறக்குமதி வியாபாரம் எனப்படும். இறக்குமதிகள் பின்வரும் இரு வகைகளை உள்ளடக்கியிருக்கும்.

1. கட்புலனாகும் இறக்குமதி : கண்ணால் பார்க்கக்கூடிய, தொட்டு உணரக் கூடிய பொருட்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படல்.

Eg: நுகர்வுப் பொருட்கள் - உணவுகளும் குடிபானங்களும்

இடைநிலைப் பொருள் - ஆடைகளும் புடவைகளும்

முதலீட்டுப் பொருள் - கட்டிடப் பொருள்

பாகுபடுத்தப்படாதவை

2. கட்புலனாகா இறக்குமதி : கண்ணால் பார்க்க முடியாத, தொட்டு உணர முடியாத சேவைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படல்.

Eg: வெளிநாட்டு தொழிநுட்பவியலாளரை இறக்குமதி செய்தல், வெளிநாட்டு கப்பல் சேவையைப் பெறுதல்.

### மீள் ஏற்றுமதி வர்த்தகம் /மறு ஏற்றுமதி வர்த்தகம்

குறிப்பிட்ட ஒரு நாடு உலக நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து துறைமுகம், விமான நிலையத்திலிருந்து தொழிற்சாலைக்கு எடுத்துச் சென்று பதப்படுத்தி மாற்றங்களை ஏற்படுத்தி அல்லது மாற்றங்களை ஏற்படுத்தாமல் மீள வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் மீள் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். இதன் மூலம் கூடிய அன்னியச் செலாவணி சம்பாத்தியம் கிடைப்பதுடன் இறக்குமதி தீர்வை அறவீடுகள் காணப்படும் மேலும் தீர்வைச் சலுகை உண்டு.

### இறக்கியேற்றும் வர்த்தகம் /இறக்கி ஏற்றும் இட வர்த்தகம்/ களஞ்சிய வர்த்தகம்

குறிப்பிட்ட ஒரு நாடு உலக நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து துறைமுகம், விமான நிலையத்தில் வைத்தே அவற்றில் எவ்வித மாற்றங்களை ஏற்படுத்தாமல் துறைமுகம், விமான நிலையத்தில் உள்ள சுங்க பண்டக சாலையில் வைத்து மீள் பதனிட்டு மீள் பொதி செய்யப்பட்டு மீள இன்னுமொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்தல் இறக்கியேற்றும் வியாபாரம் எனப்படும். இறக்கியேற்றும் வியாபாரம் சுங்கத் தீர்வைகள் அறவிடப்படாது ஆனால் துறைமுகக் கட்டணம், களஞ்சிய வாடகை அறவிடப்படும். இதன் மூலம் அன்னியச் செலாவணி சம்பாத்தியம் குறைவு, இறக்குமதி தீர்வை அறவீடுகள் விதிக்கப்படுவதில்லை மேலும் தீர்வைச் சலுகை இல்லை.

### இருபக்க வர்த்தகம்

இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு பொருட்களுக்குப் பதிலாக பொருட்களைப் பரிமாற்றிக் கொள்ளும் வியாபாரம் இருபக்க வியாபாரம் எனப்படும்.

## பலபக்க வர்த்தகம்

சர்வதேச சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டு நாடுகளுக்கிடையே அந்நிய செலாவணிக்காக பொருட்களை பரிமாற்றிக் கொள்ளும் வியாபாரம் பலபக்க வியாபாரம்.

## முழுநயக் கோட்பாடு /முழு நலன் /சார்பு நலன்

குறிப்பிட்ட ஒரு நாடு ஏனைய நாடுகளை விட குறைவான செலவுடன் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தலினால் கிடைக்கும் அனுகூலம் முழு நலன் அல்லது சார்பு நலன் எனப்படும். ஒரு நாடு இன்னுமொரு நாட்டை விடவும் ஒரு பண்டத்தை மிகவும் வினைத் திறனுடனும் குறைந்த கிரயத்துடனும் உற்பத்தி செய்யும் ஆற்றலை இது குறிப்பிடுகிறது.

## ஒப்பீட்டு நலக் கோட்பாடு அல்லது ஒப்பீட்டு கிரயக் கோட்பாடு

ஒரு நாடு ஏனைய நாடுகளை விட இலாபகரமாகவும், விரைவாகவும் உற்பத்தி செய்வதில் சிறப்புத்தேர்ச்சி பெற்று ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்து ஏனைய நாடுகள் சிறப்பாற்றல் அடிப்படையில் உற்பத்தி செய்யும் பொருட்களை கொள்வனவு செய்தல் ஒப்பீட்டு நலக் கோட்பாடு எனப்படும். சர்வதேச வியாபாரத்திற்கு காரணமாக அல்லது சுதந்திர சர்வதேச வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்தது ஒப்பீட்டு நலக் கோட்பாடே ஆகும். ஒரு நாடு இன்னுமொரு நாட்டுடன் ஒப்பிடும் போது ஒரு பண்டத்தை அதிக வினைத்திறனுடனும் ஒரு குறைந்த சந்தர்ப்ப கிரயத்திலும் உற்பத்தி செய்வதன் வழியாக அக்குறிப்பிட்ட பண்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் இதுவாகும்.

## கட்டுப்பாடற்ற சர்வதேச வர்த்தகத்தின் தீமைகள்

1. தேசிய கைத்தொழில்களும் சிறிய, நடுத்தர கைத்தொழில்களும் பாதிக்கப்படும்
2. பல்வேறு வகையான ஆடம்பரப் பொருட்களை நுகர வாய்ப்பு ஏற்பட்டு அன்னியச் செலாவணி வீண்விரயமாகும்.

3. பொருளாதாரம், அரசியல், இறைமைகள் பாதிக்கப்பட்டு தேசிய பாதுகாப்புஇ தேசிய சுகாதாரம் பாதிக்கப்படும்
4. சென்மதி நிலுவை பாதக நிலைமைகள் ஏற்படும்.

## கட்டுப்பாடற்ற சர்வதேச வர்த்தகத்தினை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

1. வரியினை நீக்குதல் அல்லது தீர்வையினைக் குறைத்து அறவிடல் (SAPTA).
2. நாணய மாற்றை சாதகமாக செயற்படுத்தல்.
3. சுங்க சமாசங்களை அமைத்து மேம்படுத்தல் (E.E.C).
4. உலகமயமாக்கல்.

## கட்டுப்பாடற்ற சர்வதேச வர்த்தகத்தினைக் குறைக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

1. சில பொருட்களின் இறக்குமதிகளை முற்றாக தடை செய்தல்.
2. சில பொருட்களின் இறக்குமதிகளுக்கு தடைகளை உருவாக்கல்.
3. சுங்கத் தீர்வைகளை, இறக்குமதித் தீர்வைகளை விதித்தலும் அதிகரித்தலும்.
4. நாணய மாற்றை பாதகமாக செயற்படுத்தல் (மிதக்கவிடல்).
5. இறக்குமதி அனுமதிப் பங்கு கோட்டாக்களின் மூலமாக கட்டுப்படுத்தல்.
6. சுகாதார விதிகளின் கீழ் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல்.
7. குவித்தல் முறையை செயற்படுத்தல்.

## சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்

1. **விலை விசாரணைக் கடிதம்**: பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புகின்ற கொள்வனவாளர்களால் பொருட்களின் விபரம், விநியோகச் செலவு, நிபந்தனை, விநியோக காலம்

என்பவற்றைக் கேட்டு விற்பனையாளனுக்கு அனுப்பும் கடிதம்.

2. **விலை கூறல் கடிதம்**: விலை விசாரணைக் கடிதத்திற்க்கு பதில் அனுப்பும் முகமாக பொருட்கள் பற்றிய விபரம் வினியோகச் செலவு, வினியோக நிபந்தனை, வினியோகக் காலம் என்பவற்றைக் குறிப்பிட்டு விற்பனையாளரினால் கொள்வனவாளனுக்கு அனுப்பும் கடிதம்.

3. **கொள்வனவுக் கட்டளை அல்லது தரவாணை அல்லது கட்டளை அட்டவணை**: கொள்வனவாளனால் விற்பனையாளனுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய பொருட்களின் அளவு, தரம், பொதியமைப்பு, குறியீடு போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு எழுத்துருவில் அனுப்பும் கட்டளை.

4. **மாதிரிக் கிரயப் பட்டியல்**: விற்பனையாளனால் கொள்வனவாளனுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற பொருட்களின் வகை, விலை, வினியோகச் செலவு போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு அனுப்பும் கட்டளை மாதிரி கிரயப் பட்டியல் எனப்படும்.

5. **விலைப் பட்டியல்**: விற்பனையாளர்கள் தம்மிடம் விற்பனைக்குள்ள பொருட்களின் விபரங்களை வெளிக்காட்டும் பட்டியல். இது பொருளின் பெயர், வகை, நிறையளவு, விலை போன்ற பல விபரங்களைக் கொண்டு காணப்படும்.

6. **அறிவித்தல் குறிப்பு அல்லது அறிவிப்புக் கடிதம்**: கொள்வனவுக் கட்டளைக்கமைய பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு விற்பனையாளனால் கொள்வனவாளனுக்கு அனுப்பப்படும் கடிதம்.

7. **ஒப்படைக் குறிப்பு அல்லது ஒப்படைப் பத்திரம்**: கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பரிசோதனை செய்து எடுக்க விற்பனையாளர்களினால் கொள்வனவாளனுக்கு வழங்கப்படும் குறிப்பு.

8. **வரவுத்தாள்**: பட்டியல் தொகையிலும் மேலதிகமான தொகை ஒன்றை வசூல் செய்ய வேண்டிய நிலையில் விற்பனையாளர்களினால் கொள்வனவாளனுக்கு அனுப்பப்படும் ஆவணம். ஆட்குறிக் கணக்கில் எப்போதும் வரவு வைக்கப்படும், வெளித்திருப்பத்தின் வேளை பயன்படுத்தப்படும்.

9. **செலவுத்தாள்**: பட்டியல் தொகையை குறைக்க வேண்டிய நிலையில் அதாவது கடன் தொகையை குறைக்க வேண்டிய நிலையில் விற்பனையாளரால் சிவப்பு மையில் எழுதப்பட்டு கொள்வனவாளருக்கு வழங்கப்படும் ஆவணம்.

10. **பட்டியல்**: விற்பனையாளரால் கொள்வனவாளருக்கு அல்லது ஏற்றுமதியாளரால் இறக்குமதியாளருக்கு அனுப்பி வைக்கின்ற பொருளின் விபரம், விலை, பணம் செலுத்தும் நிபந்தனைகள் போன்றவற்றை உள்ளடக்கும் ஆவணம்.

**உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் அல்லது தோற்றுவாய்ச் சான்றிதழ்**

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் ஏற்றுமதி நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்தி அந்நாட்டு வணிகக் கழகத்தினால் அல்லது அமைச்சு நிறுவனங்களினால் வழங்கப்படும் ஆவணம். இதனை பின்வருவோரினால் வழங்கப்படும்.

1. வணிகக் கழகம்
2. புடவைக் கைத்தொழில் அமைச்சு

3. கைவினைப் பொருட்கள் சந்தைப்படுத்தல் அதிகார சபை
4. இலங்கை வர்த்தகத் திணைக்களம்

### உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் வழங்குவதன் நோக்கம்

1. சுங்கத் தீர்வைச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளல்.

2. வரி தள்ளுபடி பெறச் செய்யும் வஞ்சக செயல், தடுக்கப்பட்டு நாடுகளிலிருந்து பொருள் பெறல் போன்ற வேறு நிலைமைகளிலிருந்து தவிர்த்து பொருள் உற்பத்தி செய்த நாட்டை உறுதிப்படுத்தல்.

### பிரதிநிதி அத்தாட்சிப் பத்திரம்

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விபரங்களும் பட்டியலில் உள்ள விலைகளும் சரியானது என்பதை உறுதிப்படுத்தி இறக்குமதி நாட்டு தூதுவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம். அதன் நன்மைகளாக

1. சுங்கப் பரிசோதனைகளை இலகுவாக மேற்கொண்டு தீர்வைகளை விரைவாக செலுத்தி பொருட்களை எடுத்துச் செல்ல இது பயன்படும்.

2. விலைகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தவும் இது பயன்படும்.

### சுமைச்சீட்டு அல்லது வார்நாமம்

கப்பலில் பொருட்கள் ஏற்றப்பட்டதற்கு ஆதாரமாகவும் ஏற்றப்பட்ட பொருட்களானது இறக்குமதி துறைமுகம் வரை கொண்டு சமர்ப்பிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தி கப்பல் கம்பனியால் ஏற்றுமதியாளரால் வழங்கப்படும் ஆவணம்.

### சுமைச் சீட்டின் பயன் அல்லது தொழிற்பாடு அல்லது நோக்கம்

பொருட்கள் ஏற்றப்பட்டதற்கும் ஏற்றப்பட்ட பொருட்களான இறக்குமதி துறைமுகம் வரை கொண்டு சமர்ப்பிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தல் இறக்குமதியாளர் தமக்கு பொருள் உரிமையுடையது என்பதை நிருபிப்பதற்கான ஆவணம்.

### சுமைச்சீட்டின் வகைகள்

1. **தூய சுமைச்சீட்டு**: கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களின் பொதியமைப்பில் எவ்வித குறைபாடுகளும் இல்லை என்பதனை குறிப்பிட்டு வழங்கப்படும் சுமைச்சீட்டு

2. **குற்றமுடைய சுமைச்சீட்டு**: கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களின் பொதியமைப்பில் குறைபாடு உள்ளது என்பதனைக் குறிப்பிட்டு வழங்கப்படும் சுமைச்சீட்டு.

### நட்ட ஈட்டுக் கடிதம்

கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்கள் தொடர்பாக குற்றமுடைய சுமைச்சீட்டு பெறுவதனை தவிர்த்து தூய சுமைச் சீட்டைப் பெற்றுக் கொள்ள பொருட்களைக் கொண்டு செல்கையில் ஏற்படும் நட்டத்தையும் இறக்குமதியாளன் பொருள் ஏற்க மறுப்பதனால் ஏற்படும் செலவுகளையும் தாம் பொறுப்பேற்பதாக ஏற்றுமதியாளனால் கப்பல் கம்பனிக்கு வழங்கப்படும் கடிதம்.

### ஏற்றுமதி அனுமதிப் பத்திரம்

பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் போது ஏற்றுமதி செய்பவர் பெயர், ஏற்றுமதி செய்யப்படும் பொருள், ஏற்றுமதி செய்யும் நாடு, ஏற்றுமதிக் காலம் என்பவற்றைக் குறிப்பிட்டு ஏற்றுமதியாளனால் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடு திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ளப்படும் ஆவணம்.

## இறக்குமதி அனுமதிப் பத்திரம்

பொருட்களை இறக்குமதி செய்யப்படும் போது இறக்குமதி செய்பவர் பெயர், இறக்குமதி செய்யப்படும் பொருள், இறக்குமதி செய்யும் நாடு, இறக்குமதிக் காலம் என்பவற்றைக் குறிப்பிட்டு இறக்குமதியாளனால் அல்லது முகவரால் ஏற்றுமதி இறக்குமதி கட்டுபாடு திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ளப்படும் ஆவணம்.

## ஏற்றுமதிப் பதிவு அல்லது ஏற்றுமதிக் குறிப்பு

ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விபரங்களை உள்ளடக்கியதாக ஏற்றுமதியாளரால் சுங்கத் திணைக்களத்திற்கு வழங்கப்படும் அறிக்கை

## இறக்குமதி பதிவு அல்லது இறக்குமதி குறிப்பு

இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விபரங்களை உள்ளடக்கியதாக இறக்குமதியாளரால் அல்லது முகவரால் சுங்கத் திணைக்களத்திற்கு வழங்கப்படும் அறிக்கை. இதன் நோக்கம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பொருள் தொடர்பான உரிமையினை, விபரங்களினை உறுதிப்படுத்தி இறக்குமதித் தீர்வையை இலகுவாக கணிப்பிடும் நோக்கு.

## காட்சிப் பட்டியல் அல்லது தரிசனப் பட்டியல்

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இறக்குமதி துறைமுகத்தினை வந்து சேர்ந்தும் இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் வந்து சேராத நிலையில் இறக்குமதியாளன் தமக்குத் தெரிந்த விபரங்களைக் கொண்டு சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து தயாரித்துக் கொள்ளும் பட்டியல் காட்சிப் பட்டியல் எனப்படும்.

## நட்ட ஈட்டு அத்தாட்சிப் பத்திரம் அல்லது நட்ட ஈட்டு சான்றிதழ்

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் துறைமுகம் வந்து சேர்ந்தும் இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் வந்து சேராத நிலையில் இறக்குமதியாளனால் தயாரிக்கப்பட்ட காட்சிப் பட்டியலை உத்தரவாதப்படுத்தி அதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை தாம் பொறுப்பேற்பதாக இறக்குமதியாளனுடைய வங்கியினால் உத்தரவாதப்படுத்தி வழங்கப்படும் சான்றிதழ்.

## ஈடு கொடுத்தல் பத்திரம் அல்லது கொதுவைக் கடிதம்

இறக்குமதியாளனானவன் ஏற்றுமதியாளனால் அனுப்பப்பட்ட மாற்றுண்டியலை ஒப்புக் கொள்ள அல்லது பணம் செலுத்த மறுக்கும் வேளை பொருளை விற்று விட்டு தமக்குரிய தரகையும்இ செலவையும் கழித்துக் கொண்டு மீதியை அனுப்பி வைக்குமாறு ஏற்றுமதியாளனால் இறக்குமதி நாட்டு வங்கிக்கு வழங்கப்படும் சான்றிதழ்.

## ஏற்றுமதி அனுமதிச் சீட்டு வழங்கும் நிலையங்கள்

| | | |
|---|---|---|
| தேயிலை | : | தேயிலைக் கட்டுப்பாட்டுச் சபை. |
| இறப்பர் | : | பண்டக் கொள்வனவுத் திணைக்களம். |
| தெங்கு | : | தெங்கு சந்தைப்படுத்தும் நிறுவனம். |
| வாசனைச் சரக்கு | : | ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம். |
| தைக்கப்பட்ட ஆடைகள் | : | புடவைக் கைத்தொழில் அமைச்சு. |

## ஏற்றுமதி இறக்குமதி கொடுக்கல் வாங்கல் வர்த்தகம் நடைபெறும் முறைகள்

1. **நேர் முறை**: ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் நேரடியாக தொடர்வு கொள்வதன் மூலம் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறல் நேர் முறை எனப்படும்

2. **முகவர் முறை**: ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் தமக்கென இடைநடுவர்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தினை மேற்கொள்ளல் முகவர் முறை எனப்படும்.

## சர்வதேச வர்த்தகத்தில் கொள்வனவாளர்கள் பற்றிய தகவல்களை பெறக்கூடிய மூலங்கள்

1. விசேட வியாபார பெயர் பட்டியல்
2. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
3. வெளிநாட்டு தூதுவர் காரியாலயம்
4. தேசிய ஏற்றுமதி மேம்படுத்தல் நிறுவனம்
5. வர்த்தக கப்பல் துறை அமைச்சின் செய்தி அலகு
6. இலங்கை வணிகக் கழகம்
7. ஏற்றுமதி தகவல் சேவை அலகு
8. வெளிநாட்டு தனிப்பட்டவர் தொடர்பு

## ஏற்றுமதி நடைமுறைகள்

1. ஏற்றுமதி தொடர்பான தகவல்களை சேகரித்தல்
2. ஏற்றுமதியாளர் ஒருவராக பதிவு செய்து கொள்ளல்
3. மாதிரிப் பொருட்களை அனுப்புதல்
4. பெயரளவுப் பட்டியல் அல்லது மாதிரி கிரயப் பட்டியலைத் தயாரித்து அனுப்புதல்
5. வியாபார ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளல்

6. ஏற்றுமதிப் பொருட்களுக்கான கட்டளையினைப் பெற்றுக் கொள்ளல்
7. ஏற்றுமதிப் பொருட்களுக்கான அனுமதிப் பத்திரத்திரத்தினை பெற்றுக் கொள்ளல்
8. ஏற்றுமதிக்கான ஆவணங்களைத் தயாரித்தல்
9. கொடுப்பனவுகள் ஒழுங்கு செய்து பணத்தைப் பெற்றுக் கொள்ளல்

## இறக்குமதி நடைமுறைகள்

1. வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள் அல்லது வழங்குனர் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
2. விலை விசாரணைக் கடிதம் அனுப்புதல்
3. இறக்குமதி அனுமதிப் பத்திரம் அனுப்புதல்
4. வெளிநாட்டு செலாவணி அனுமதிப் பத்திரம் பெறல்
5. கட்டளை அனுப்புதல்
6. கொடுப்பனவினை ஒழுங்கு செய்தல்
7. இறக்குமதி பதிவுப் பட்டியல் சமர்ப்பித்தல்
8. ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல்
9. சுங்கவரி துறைமுகக் கட்டணம் என்பவற்றைச் செலுத்துதல்
10. பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.

## சர்வதேச வர்த்தகத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகளும் கருவிகளும்

1. நாணயக் கடிதம்
2. ஆவண மாற்றுண்டியல்
3. வங்கியாணை
4. தந்திமாற்று
5. அஞ்சல் மாற்று
6. ரெலக்ஸ் மாற்று
7. பெக்ஸ் மாற்று
8. இலத்திரனியல் கொடுப்பனவு முறை

## உசாத்துணைகள்


*Parameshwaran, V. (2008). Economics, KSK Publication, Colombo*

*Bandaranayaka J., and Sivanesaraja A. (2008), Business Studies, Janani Publication, Colombo.*

*https://www.businessmanagementideas.com/international-trade/list-of-documents-used-in-international-trade-business/17403*

*https://businessjargons.com/international-marketing.html*

*https://www.morethanshipping.com/international-trade-and-documents/*

*https://www.internationalrelationsedu.org/what-is-international-business/*

# முழு வருமானக் கருதுகோள்

கணேசமூர்த்தி கஜேந்தினி[7]

## அறிமுகம்

பேரினப் பொருளியல் பகுப்பாய்வில், நுகர்வு மற்றும் நுகர்விற்கான செலவு என்பன மிக முக்கியமான மாறிகளாக அவதானிக்கப்படுகின்றது. ஒரு பொருளாதாரத்தில், பொருளாதார நடவடிக்கைகளின் எல்லையினைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக நுகர்வு காணப்படுவதனால், வருமானத்தினை தீர்மானிக்கும் மாதிரிகளில் மிக முக்கியமான மாறியாக இது உள்ளது. எனவே நுகர்வுச் செலவினைத் தீர்மானிக்கும் காரணிகள் மற்றும் நுகர்வினை தீர்மானிக்கும் காரணிகளுக்கும் நுகர்விற்குமான தொடர்பு என்பன உள்ளடங்களாக நுகர்வுக் கோட்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகின்றது.

ஜோன் மைனார்ட் கெயின்ஸ் (John Maynard Keynes) தனது பொதுக் கோட்பாட்டில் வீட்டுத்துறையினரால் மேற்க்கொள்ளப்படும் மொத்த நுகர்வு தொடர்பாக ஒரு எண்ணக்கருவை விருத்தி செய்திருந்தார். அது நுகா்வுத் தொழிற்பாடு என்று அழைக்கப்பட்டது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர், கெயின்சின் நுகர்வுக் தொழிற்பாட்டிற்கு எதிராக, வீட்டுத்துறையினரது நுகர்வானது நடைமுறையில் பெறும் வருமானத்தில் மட்டும் தங்கியிருக்காமல் செல்வம், வரி விதிப்பு, வட்டி வீதம், நுகர்வுக் கடன்களின் கிடைப்பனவு, நுகர்வோரின் எதிர்பார்ப்பு மற்றும் வருமானப் பங்கீடு போன்ற பல காரணிகளிலும் தங்கியுள்ளது என்ற கருத்தினை பின்வந்த பொருளியலாளர்கள் முன்வைத்தார்கள். இதனால் இதனை தொடர்ந்து வந்த காலங்களில் நுகர்வு மட்டத்தினை தீர்மானிக்கும் காரணிகளைக் கண்டறிவது தொடர்பாக நீண்டகால

---

[7] விரிவுரையாளர் (தகுதிகாண்), பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

வாதத்திற்கு கொண்டுசென்றதுடன், நுகர்வு கோட்பாட்டின் தோற்றத்திற்கும் பங்களித்திருந்தது. இதன் விளைவாக பொருளியலாளர்கள், வீட்டுத்துறையின் வருமானத்தின் தொழிற்பாடாகவே அவ்வீட்டுத்துறையினரின் நுகர்வுச் செலவு உள்ளது என்பதனை ஏற்றுக் கொண்டாலும் எவ்வகை வருமான வகையின் தொழிற்பாடாக நுகர்வுச் செலவு உருவாகின்றது என்பது தொடர்பாக வெவ்வேறுபட்ட கருத்தினை கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு வெவ்வேறுபட்ட பொருளியலாளர்கள், நுகர்வுச் செலவினை முழு வருமானம் அல்லது சார்பு வருமானம் (absolute income or relative income), நடைமுறை வருமானம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால வருமானம் (current income or expected future income), குறுங்கால அல்லது நீண்டகால வருமானம் (short-term income or long-term income) போன்ற வெவ்வேறு வகையான வருமான வகைகளுடன் தொடர்புபடுத்தி பிரதானமாக பின்வரும் நான்கு கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டு நுகர்வுத் தொழிற்பாட்டுக் கோட்பாட்டிற்கு பங்களித்திருந்தார்கள். அவை பின்வருமாறு,

1. முழு வருமானக் கருதுகோள் (Absolute Income Hypothesis)
2. சார்பு வருமானக் கருதுகோள் (Relative Income Hypothesis)
3. வாழ்க்கை சுழற்சிக் கருதுகோள் (Life Cycle Hypothesis)
4. நிரந்தர வருமானக் கருதுகோள் (Permanent Income Hypothesis)

இவை கெயின்சுக்குப் பிந்திய நுகர்வுத் தொழிற்பாட்டுக் கோட்பாடுகள் என அழைக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட கோட்பாடுகள் நுகர்வுத் தொழிற்பாட்டுக் கோட்பாடு மற்றும் பேரினப்பொருளியல் பகுப்பாய்வு என்பவற்றில் முதன்மை பெறுகின்றன. இவற்றில் இக்கட்டுரையானது முழு வருமானக் கருதுகோளினை ஆராய்கின்றது.

## முழு வருமானக் கருதுகோள்

முழு வருமானக் கருதுகோள், முழு வருமானக் கோட்பாடு எனவும் அழைக்கப்படுகின்றது. இவ் நுகர்வுக் கோட்பாடானது பல்வேறுபட்ட பண்புகளைக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது கெயின்சின் நுகர்வுக் கோட்பாட்டின் அடிப்படை உளவியல் விதியினை (fundamental psychological law) அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. இவரது கருத்தின் படி, அடிப்படை உளவியல் விதியானது நுகர்வோன் அவனுடைய அனுபவம் மற்றும் அவற்றிற்குரிய இயற்கை ஆற்றல் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளித்து, வருமானம் அதிகரிக்கும் போது நுகர்வினை அதிகரிப்பான். ஆனால் இவ் அதிகரிப்பு வருமானம் அதிகரிக்கும் அளவினைப் போல் அதிகரிக்க இடமளிக்காது. அதாவது அடிப்படை உளவியல் விதியிற்கிணங்க வருமானம் அதிகரிக்க நுகர்வு அதிகரித்தாலும், வருமான அதிகரிப்பு வேகத்தைவிட நுகர்வு அதிகரிப்பு வேகம் குறைவாகவே இருக்கும். இவ் விதியின் படி ஒருவர் தனது ஆழமான அனுபவம் மற்றும் அவருடைய ஆற்றலின் வெளிப்பாடாக நுகர்வுத் தொழிற்பாடு அமைகிறது என கெயின்ஸ் கூறுகிறார். மேலும் வீட்டுத்துறையினர் அவர்களுடைய நடைமுறை நுகர்வுச் செலவினை அவர்களிடம் தற்போதுள்ள வருமான மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கின்றார்கள் என கெயின்ஸ் தனது நுகர்வுத் தொழிற்பாட்டில் வெளிப்படுத்தியிருந்தார். அடிப்படை உளவியல் விதியின் படி, முழு வருமான நுகர்வுக் கோட்பாட்டுக் கருதுகோள் என்பது நடைமுறை நுகர்வுச் செலவானது தற்போதைய வருமானம் மற்றும் வருமானத்தின் முழு மட்டத்திலும் தங்கியுள்ளது என்பதாகும். இதற்கிணங்க நடைமுறை வருமானத்தின் தொழிற்பாடாகவே நடைமுறை நுகர்வுச் செலவுஅமையும். இதனை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

$$C = f(Y)$$

இங்கு,C = நடைமுறை நுகர்வு

Y = நடைமுறை வருமானம்

முழு வருமானக் கோட்பாடு பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

- மெய் செலவிடத்தக்க வருமானத்தின் (Yd) நேர்கணிய தொழிற்பாடே மெய் நுகர்வுச் செலவாகும் (C). அதாவது நுகர்வு மற்றும் வருமானம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பே முழு வருமானக் கருதுகோளினை உருவாக்கின்றது. இங்கு $C = f\ (Y)$ மற்றும் $\Delta C/\ \Delta Y>0$ ஆகக் காணப்படும்.
- நுகர்வு செய்யப்பட்ட எல்லை வருமானத்தின் எல்லை விகிதம் (எல்லை நுகர்வு நாட்டம்) பூச்சியத்திற்கும் ஒன்றிற்குமிடையில் காணப்படும். இதனை $0< MPC <1$ எனக் குறிப்பிடலாம்.
- எல்லை நுகர்வு நாட்டமானது, சராசரி நுகர்வு நாட்டத்தினை விட (APC) குறைவாகக் காணப்படும். $\Delta C/\ \Delta Y < C/Y$
- நுகர்வோனின் வருமானம் அதிகரிக்கும் போது எல்லை நுகர்வு நாட்டம் குறைவடையும். இதனால் நுகர்விற்காக செலவு செய்யப்படும் எல்லை வருமானத்தினளவு குறைவடைந்து செல்லும்.

மேற்குறிப்பிட்டுள்ள அம்சங்களில் முதல் இரண்டு அம்சங்களும் கெயின்சினுடைய நுகர்வுக் கோட்பாட்டில் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. மேலும் முழு நுகர்வுக் கோட்பாட்டு விளக்கத்தில் வீட்டுத்துறையினரின் செல்வத்தில் ஏற்படும் அதிகரிப்பே நுகர்வில் ஏற்படும் அதிகரிப்பாக கருதினார்.

முழு வருமானக் கருதுகோளினை பின்வரும் வரைபடம் 1.1 மூலம் விளங்கிக்கொள்ள முடியும். வரைபடத்தின் படி வருமானம் மற்றும் நுகர்விற்கிடையிலான தொடர்வினை $45^{0}$கோடு $(C=Y)$ காட்டுகின்றது.




வரைபடம் 1.1: வருமானம் மற்றும் நுகர்வு (Dwivedi, 2012)

இவ்வரைபடத்தில், C=Y என்ற நடைமுறை நுகர்வுச் செலவு எப்பொழுதும் நடைமுறை வருமானத்திற்கு சமமாக காணப்படும் என்பதனைக் விளக்குகின்றது. இதன்படி வருமானம் பூச்சியமாகக் காணப்பட்டால் (Y=0), நுகர்வும் பூச்சியமாகக் (C=0) காணப்படும். ஆனால் இந்நிலைமை நடைமுறைக்கு சாத்தியமற்றது. ஏனெனில் மக்களின் வருமானம் பூச்சியமாகக் காணப்பட்டாலும் அவர்கள் கடன் பெற்றோ அல்லது களவு செய்தோ தமது நுகர்வினை மேற்கொள்ளத் தூண்டப்படுவார்கள்.

மக்களின் வருமானம் அதிகரிக்கும் போது அவர்கள் முழு வருமானத்தினையும் நுகர்விற்காக செலவிடமாட்டார்கள். இது நுகர்வோரின் நடத்தையின் மற்றுமோர் இயல்பாகும். நுகர்வோர் வருமானம் அதிகரிக்கும் போது, நுகர்விற்கு செலவு செய்வதுடன் அதில் ஒரு பகுதியினை எதிர்பாராத செலவுகளை (நோய், இறப்பு, வேலையின்மை, வேலையிழப்பு) எதிர்கொள்வதற்காகவும் மற்றும் எதிர்கால வருமானத்தினை அதிகரிக்கும் பொருட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்காகவும் சேமிப்பாக மேற்கொள்வார்கள்.

வரைபடத்தின் படி, C1 வளையி கெயின்சின் முழுவருமான நுகர்வுக் கோட்பாடு போன்று அமைகிறது. இவ் C1 வளையியானது நுகர்வோன் நடத்தையினை விளக்குவதுடன் மட்டுமல்லாமல், நுகர்விற்காக செலவிடும் அளவானது குறிப்பிட்ட நடைமுறை வருமான எல்லை வரைக்கும் அவ் வருமான மட்டத்தினை விட மிஞ்சி விடுகிறது. அதாவது நடைமுறை வருமானத்தினை விட நுகர்வுச்செலவு அதிகமாகக் காணப்படுகின்றது. மேலும், புள்ளி B யில் வருமானம் மற்றும் நுகர்வு என்பன சமப்பட்டுக் காணப்படும். B புள்ளிக்கு அப்பால் வருமான அதிகரிப்பிற்கு ஏற்ப நுகர்விற்கான செலவு அதிகரித்தாலும் அவ்வதிகரிப்பு மெதுவான விகிதத்திலே (Slow rate) காணப்படுகின்றது. இங்கு C1 வளையியின் சரிவானது வருமான அதிகரிப்புடன் குறைந்து செல்கின்றது. இது எல்லை நுகர்வு நாட்டம் வருமான அதிகரிப்புடன் குறைந்து செல்வதைக் காட்டுகின்றது.

எனவே முழு வருமான நுகர்வுக் கோட்பாட்டின் படி, எல்லை நுகர்வு நாட்டம் (MPC) குறைவடையும். அதாவது வீட்டுத்துறையினர் நுகர்விற்காக செலவிடும் எல்லை வருமானம் குறைந்து செல்லும். இதனால் குறைந்த வருமானம் பெறும் வீட்டுத்துறையில் தமது வருமானத்தில் குறைந்த சதவீதத்தை சேமிப்பார்கள். மாறாக அதிக வருமானம் பெறும் வீட்டுத்துறையினர் அவர்களின் வருமானத்தின் பெரும் பகுதியை சேமிப்பார்கள்.அதாவது குறைந்த வருமானம் பெறுகின்ற வீட்டுத்துறையினரை அதிக வருமானம் பெறுகின்ற வீட்டுத்துறையினருடன் ஒப்பிடும் போது, உயர் எல்லை நுகர்வு நாட்டத்தினை கொண்டிருப்பார்கள். இதனால் இவர்கள் அதிகளவு நுகர்வு செய்வதுடன் குறைந்தளவில் சேமிப்பினை மேற்கொள்வார்கள். இக் கோட்பாட்டு ரீதியான விளக்கத்தினை முழு சமூகத்திலும் அவதானிக்கும் போது வருமான நுகர்வு வளையி (C1) கீழ் நோக்கிய வளைவுடன் கூடிய நேர்மறைவான சரிவினைக் கொண்டு காணப்படும்.

‘‘பொதுக்கோட்பாடு’’ என்றநூல் வெளியிடப்பட்டு சில வருடங்கள் வரை, பல பொருளியலாளர்களால் கெயின்சின் நுகர்வுக் கோட்பாடு ஏற்றுக்கெள்ளப்பட்டிருந்தது. ஆனாலும் மேற்கொள்ளப்பட்ட அனுபவ ரீதியான ஆய்வுகளில் நிலையான தன்மை (stable

nature) உடையதே எல்லை நுகர்வு நாட்டம் என்ற முடிவினை வெளிப்படுத்தியது. உதாரணமாக கெயின்சியப் பொருளியலாளர்கள் ஐக்கிய அமெரிக்காவின் 1929 ஆம் ஆண்டு தொடக்கம் 1941ஆம் ஆண்டு வரையான தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் நுகர்வுத் தொழிற்பாட்டினை கணிப்பிட்டிருந்தார்கள்.

$$C = 26.5 + 0.75\ Yd$$

இவ் நுகர்வுத் தொழிற்பாடு கெயின்சின் நுகர்வுக் கோட்பாட்டிற்கு ஆதரவளித்திருந்தது. மேலும் இது போன்ற பங்களிப்பினை குடும்ப வரவு செலவுத்திட்டம் மீது மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு ஆய்வும் வழங்கியிருந்தது. MPC பூச்சியத்தை விட அதிகமாக இருந்தது. இதனைபடி, 0 மற்றும் $b < 1$ எனக் குறிப்பிட முடியும். இதனைத் தொடர்ந்து கெயின்சிய பொருளியலாளர்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் வருமானத்திற்கும் நுகர்விற்குமிடையே நேரான கோட்டினை கண்டறிந்தார்கள். இவ் நேர் கோட்டினுடைய தொழிற்பாடு முழுவருமான நுகர்வு கோட்பாட்டினை விளக்குகிறது.

$$C= a+bY$$

இங்குஇடைவெட்டானது (a), வருமானம் பூச்சியமாகக் காணப்படும் வேளையிலும் மேற்கொள்ளப்படும் நுகர்வினைக் குறிக்கின்றது. மற்றும் b எல்லை நுகர்வு நாட்டத்தினைக் ($MPC = \Delta C/\Delta Y$) குறிக்கின்றது. வரைபடத்தில் இவ் நுகர்வுத் தொழிற்பாட்டினை $C_2$ என்ற கோடு மூலம் காட்டப்பட்டுள்ளது. நுகர்வுத் தெழிற்பாட்டில் மாறாத சரிவுடன் உள்ள இக்கோட்டின் முடிவெல்லையிலும் முழு வருமான கருதுகோளின் அடிப்படை கருத்தினை மாற்றிடவில்லை. ஆனால் $C_2$ கோடு, இலாபநட்டமற்றபுள்ளி B யினை மேல் நகர்த்தி விடுகிறது அல்லது C=Y என்ற கோட்டினை கீழே நகர்த்தி விடுகிறது.

மேலும் இவ் நுகர்வுக் கோட்பாட்டினை நேர்கோட்டு நுகர்வுத் தொழிற்பாடு, நேர்கோடல்லாத நுகர்வுத் தொழிற்பாடு எனவும் வெவ்வேறாக விளக்கப்படுகின்றது. இடைவெட்டுடன் கூடிய

நேர்கோட்டு நுகர்வுத் தொழிற்பாட்டினை, பின்வரும் வரைபடம் 1.2 விளக்குகின்றது.




வரைபடம் 1.2 நேர்கோட்டு நுகர்வுத் தொழிற்பாடு (Ahuja, 2002)

வரைபடத்தின்படி, வருமானம் அதிகரிக்கும் போது ($Y_1$-$Y_2$) எல்லை நுகர்வு நாட்டம் (MPC) மாற்றமடையாமல் காணப்படுவதுடன், சராசரி நுகர்வு நாட்டம் (APC) குறைவடையும். வரையப்பட்ட தொடுபுள்ளி மூலம், புள்ளி B இல் $Y_2$ எனும் உயர் வருமானமட்டத்தில் பெறப்படும் எல்லை நுகர்வு நாட்டம் (MPC), புள்ளி A இல் $Y_1$ எனும் குறைந்த வருமானமட்டத்தில் வரையப்பட்ட தொடுபுள்ளியுடன் ஒப்பிடும்போது, குறைவான சரிவினைக் கொண்டிருக்கின்றது. வருமானம் அதிகரிக்கும் போது குறைவடையும் சராசரி நுகர்வு நாட்டம் (APC), நாட்டின் தேசிய வருமானத்துடன் வருமானத்தின் விகிதாசாரத்தில் ஏற்படும் அதிகரிப்பினை உட்குறிக்கின்றது. மாறாக, கெயின்சின் நேர்கோடல்லாத நுகர்வுத் தொழிற்பாட்டின் ஊடாக, எல்லை நுகர்வு நாட்டம், சராசரி நுகர்வு நாட்டம் என்பன குறைவடைந்து செல்வதனை பின்வரும் வரைபடம் 1.3 விளக்குகின்றது. இதனூடாக, வருமானம் அதிகரிக்கும் போது நாட்டின் தேசிய வருமானத்தின் அதிகளவு விகிதம் சேமிக்கப்படலாம். இதனால் வருமானத்தினுடைய முழுவேலை மட்டத்தினை அடைந்து அதனை நிலைநிறுத்துவதற்கு முதலீட்டினை ஊக்குவிக்க, தேசிய

வருமானத்தின் அதிகரிப்பு விகிதம் அவசியமானதாகும். இவ்வாறு வருமானம் அதிகரிப்புடன்கூடிய சேமிப்பின் அதிகரிப்பும், இதன் விளைவாக உருப்பெறும் கேள்வியின் வினைத்திறனற்ற தன்மை, குறைவடையும் நுகர்வு நாட்டத்தின் மீது தேக்கநிலையை ஏற்படுத்துவதாக கெயின்சிய பொருளியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்




வரைபடம் 1.3: நேர்கோடல்லாத நுகர்வுத் தொழிற்பாடு (Ahuja, 2002)

## முழு வருமான நுகர்வுக் கோட்பாட்டின் குறைபாடுகள்

- முழு வருமான நுகர்வு கோட்பாடு அவதானிக்கப்பட்ட உண்மைகளை விட சுய பரிசோதனையை அதிகம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ் நுகர்வு கோட்பாடு ஒரு யூகமான பொருளாதார நடவடிக்கையாகவே உள்ளது. ஆனால் இது செலவிடத்தக்க வருமானம் மற்றும் நுகர்வு தொடர்பாக உள்ள அனுபவரீதியான தரவுகளைக் கொண்டு விளக்கப்படவில்லை என பொருளியலாளர்களால் விமர்சிக்கப்பட்டது.

- கெயின்சின் நுகர்வுக் கோட்பாட்டிற்கு ஆதரவாக காணப்பட்ட அனுபவரீதியான ஆய்வுகள், இக் கோட்பாட்டின் இயல்புகளில் முதல் மற்றும் மூன்றாம் பண்புகளை மட்டுமே ஏற்றுக்கொண்டிருந்தது. குறிப்பாக, C= f(Yd) மற்றும் ΔC/ΔY<C/Y என்ற இரண்டு இயல்புகளிற்கு மட்டுமே அனுபவரீதியான ஆய்வுகளும் பங்களித்திருந்தன. எனவே இரண்டாம் மற்றும் நான்காம் பண்புகள் தோல்வியடைந்ததுடன் மட்டுமல்லாமல் இவையே கெயின்சின் நுகர்வு கோட்பாட்டிற்கு எதிரான விவாதத்திற்கான அடிப்படையாகவும் அமைந்திருந்தது.

- உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இவ் நுகர்வுத் தொழிற்பாட்டின் உண்மைத்தன்மை தொடர்பாக சந்தேகத்தை எழுப்பியது. குஸ்நெற்றின் (Kuznet) ஆய்வின் படி செலவிடத்தக்க வருமானம் மற்றும் சேமிப்பு என்ற இரண்டிற்குமிடையேயான தொடர்பினை 1869 – 1929 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், அமெரிக்காவின் தரவுகளைக் கொண்டு ஆய்வு செய்திருந்தார். இதன்படி எல்லை நுகர்வு நாட்டம் (MPC) மாறிலியாகக் காணப்பட்டதுடன், எல்லை நுகர்வு நாட்டம் சராசரி நுகர்வு நாட்டத்திற்கு சமமாகவும் (MPC=APC) காணப்பட்டது. இதனடிப்படையில் குஸ்நெற் C= bY என நுகர்வுத் தொழிற்பாட்டை கணிப்பிட்டதுடன், எல்லை நுகர்வு நாட்டம் (b) அண்ணளவாக 0.9 ற்கு சமமாக காணப்படும் எனவும் கண்டறிந்தார். இம் முடிவு முழு வருமானக் கருதுகோளினுடைய மூன்றாவது பண்பாக காணப்படும் எல்லை நுகர்வு நாட்டம் சராசரி நாட்டத்தை விட அதிகமாக காணப்படும் (MPC > APC) என்பதுடன் முரண்பட்டு நின்றது.

- முழு வருமான நுகர்வுத் தொழிற்பாடு, உலக யுத்தத்தின் முன்னர் சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு எதிர்வு கூறப்பட்ட நுகர்வு மட்டடம், மொத்த வருமானத்தினை விட மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. இது முழு வருமான

நுகர்வுக் கோட்பாட்டின் அனுபவரீதியான ஆய்வின் நம்பகத்தன்மை தொடர்பாக சந்தேகத்தை எழுப்பியது.

### *உசாத்துணைகள்*

*Ahuja, h.l., (2002). Macro economics: theory and policy advanced. New delhi: s.chand and company limited, ninth edition.*

*Ahuja, h.l., (2007). Macro economics: theory and policy advanced analysis. New delhi: s.chand and company limited, revised edition.*

*Dornbusch, r. And fischer, s., (2005). Macro economics. New delhi: tata mcgraw-hill publishing company limited, 6th edition.*

*Dwivedi, d.n., (2012). Macro economics: theory and policy. Tata mcgraw-hill publishing company limited, 3rd edition.*

## இணைப்பு 01: பொருளியலாளர்

### எஸ்தர் டஃப்லொ (Esther Duflo)

பிரென்சு நாட்டில் 1972இல் பிறந்த அரேிக்க குடியுரிமை கொண்ட எஸ்தர் டஃப்லோ ஒரு பிரென்சு – அமேரிக்கப் பொருளியலாளராவார். மாசசுசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் (Massachusetts Institute of Technology - (MIT)) வறுமை ஒழிப்பு மற்றும் அபிவிருத்திப் பொருளாதாரத்தின் அப்துல் லத்தீப் ஜமீல் பேராசிரியராவார்.



பொருளியலாளர் டஃப்லோ 2003ம் ஆண்டு நிறுவப்பட்ட அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை நடவடிக்கை ஆய்வகத்தின் இணை நிறுவனரும், இணை இயக்குனரும் ஆவார்.

2019ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்ட பொருளாதார வல்லுணர்களான மைக்கேல் கிரெமர் மற்றும் டஃப்லோவின் கணவர் அவிஜித் பாணர்ஜி ஆகியோருடன் இவர் வறுமை தொடர்பான ஆராய்ச்சிக்காக அப்பரிசினைப் பகிர்ந்துகொண்டார். டஃப்லோ உயிரியலில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஆனால் பொருளாதாரத் துறையில் அரிதாகப் பயன்படுத்தப்படும் randomized trials ளுக்கு முன்னோடியாக இருந்தார்.

1990 களில் எக்கோல் நாமர்ல் சுப்பரியூரில் கற்க்கும்போது இவர் சோவியத் பொருளாதாரம் குறித்த ஓர் ஆய்வறிக்கையை மேற்கொண்டதுடன் அதன் பின்பு அமேரிக்காவிற்குச் சென்று applied பொருளாதாரத்தில் கவனம் செலுத்தியதுடன், Essays in Empirical Development Economics என்ற தலைப்பில் PhD ஆய்வினையும் மேற்க்கொண்டார்.

மேலும் இவர் நோபல் பரிசுக்கு சமமான பொருளாதார அறிவியலுக்கான Bank of Sweden பரிசினையும் 2019 அக்டோபரில் வென்ற முதல் பிரென்சு பெண்ணாகவும், உலகில் இரண்டாவது பெண்ணாகவும் திகழ்ந்தார்.

இவரது ஆய்வுகள் முதன்மையாக வீட்டுத்துறையினரின் நடத்தை, நிதியியல், கல்வி மற்றும் கொள்கை மதிப்பீடுகள் போன்ற நுண்பொருளியல் பிரச்சினைகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் செல்வாக்குச் செலுத்தியது.

டஃப்லோ ஒரு தேசிய பொருளாதார ஆராய்ச்சி பணியகத்தின் ஆராய்ச்சி கூட்டாளராகவும், ஆராய்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டு பணியகத்தின் குழு உறுப்பினர் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பொருளாதார அபிவிருத்திப் பொருளாதாரத் திட்டத்தின் பொருளாதார கொள்கை ஆராய்ச்சியின் இயக்குணரும் ஆவார்.

## இணைப்பு 02: புள்ளிவிபர இணைப்புக்கள்

### அட்டவணை 01: இலங்கையின் சட்டவிதி சுட்டி

| ஆண்டு | சட்டவிதி சுட்டி | ஆண்டு | சட்டவிதி சுட்டி |
|---|---|---|---|
| 2001 | - | 2010 | -0.12 |
| 2002 | 0.33 | 2011 | -0.12 |
| 2003 | 0.24 | 2012 | -0.12 |
| 2004 | 0.18 | 2013 | -0.28 |
| 2005 | 0.15 | 2014 | -0.17 |
| 2006 | 0.18 | 2015 | 0.04 |
| 2007 | 0.13 | 2016 | 0.11 |
| 2008 | -0.01 | 2017 | 0.06 |
| 2009 | -0.11 | 2018 | 0.03 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



அட்டவணை 02: அரச செயல்திறன் சுட்டி

| ஆண்டு | அரசசெயல்திறன் சுட்டி | ஆண்டு | அரசசெயல்திறன் சுட்டி |
|---|---|---|---|
| 2001 | - | 2010 | -0.20 |
| 2002 | -0.04 | 2011 | -0.11 |
| 2003 | -0.20 | 2012 | -0.21 |
| 2004 | -0.42 | 2013 | -0.17 |
| 2005 | -0.31 | 2014 | 0.05 |
| 2006 | -0.16 | 2015 | -0.01 |
| 2007 | -0.08 | 2016 | -0.03 |
| 2008 | -0.12 | 2017 | -0.15 |
| 2009 | -0.15 | 2018 | -0.24 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



அட்டவணை 03: ஊழல் கட்டுபாடு சுட்டி

| ஆண்டு | ஊழல் கட்டுபாடு | ஆண்டு | ஊழல் கட்டுபாடு |
|---|---|---|---|
| 1999 | - | 2009 | -0.40 |
| 2000 | -0.18 | 2010 | -0.42 |
| 2001 | - | 2011 | -0.39 |
| 2002 | -0.18 | 2012 | -0.24 |
| 2003 | -0.23 | 2013 | -0.21 |
| 2004 | -0.15 | 2014 | -0.34 |
| 2005 | -0.34 | 2015 | -0.34 |
| 2006 | -0.20 | 2016 | -0.31 |
| 2007 | -0.15 | 2017 | -0.45 |
| 2008 | -0.23 | 2018 | -0.34 |

***Source: (The World Bank and The Global Economy Data, 2020)***



அட்டவணை 04: ஒழுங்குமுறை தரச் சுட்டி

| ஆண்டு | ஒழுங்குமுறைச் தரச் சுட்டி | ஆண்டு | ஒழுங்குமுறைச் தரச் சுட்டி |
|---|---|---|---|
| 1999 | - | 2009 | -0.28 |
| 2000 | 0.24 | 2010 | -0.22 |
| 2001 | - | 2011 | -0.11 |
| 2002 | 0.19 | 2012 | -0.11 |
| 2003 | 0.10 | 2013 | -0.15 |
| 2004 | -0.07 | 2014 | -0.10 |
| 2005 | -0.42 | 2015 | -0.05 |
| 2006 | -0.27 | 2016 | -0.31 |
| 2007 | -0.29 | 2017 | -0.45 |
| 2008 | -0.37 | 2018 | -0.34 |

***Source: (The World Bank and The Global Economy Data, 2020)***



அட்டவணை 05: குரல் மற்றும் பொறுப்புக்கூறல் சுட்டி

| ஆண்டு | குரல் மற்றும் பொறுப்புக்கூறல் சுட்டி | ஆண்டு | குரல் மற்றும் பொறுப்புக்கூறல் சுட்டி |
|---|---|---|---|
| 1999 | - | 2009 | -0.48 |
| 2000 | 0.19 | 2010 | -0.51 |
| 2001 | - | 2011 | -0.55 |
| 2002 | -0.09 | 2012 | -0.58 |
| 2003 | -0.09 | 2013 | -0.59 |
| 2004 | -0.16 | 2014 | -0.67 |
| 2005 | -0.21 | 2015 | -0.30 |
| 2006 | -0.31 | 2016 | -0.08 |
| 2007 | -0.44 | 2017 | -0.06 |
| 2008 | -0.46 | 2018 | -0.01 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



அட்டவணை 06: அரசியல் ஸ்திரத்தன்மை சுட்டி

| ஆண்டு | அரசியல் ஸ்திரத்தன்மை சுட்டி | ஆண்டு | அரசியல் ஸ்திரத்தன்மை சுட்டி |
|---|---|---|---|
| 1999 | - | 2009 | -1.34 |
| 2000 | -1.90 | 2010 | -0.94 |
| 2001 | - | 2011 | -0.72 |
| 2002 | -0.78 | 2012 | -0.72 |
| 2003 | -1.83 | 2013 | -0.61 |
| 2004 | -1.01 | 2014 | -0.33 |
| 2005 | -1.15 | 2015 | -0.09 |
| 2006 | -1.42 | 2016 | 0.00 |
| 2007 | -1.75 | 2017 | -0.07 |
| 2008 | -1.80 | 2018 | -0.18 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



அட்டவணை 07: ஊழல் உணர்வுகள் சுட்டி

| ஆண்டு | ஊழல் உணர்வுகள் சுட்டி | ஆண்டு | ஊழல் உணர்வுகள் சுட்டி |
|---|---|---|---|
| 1999 | - | 2009 | 0.31 |
| 2000 | - | 2010 | 0.32 |
| 2001 | - | 2011 | 0.33 |
| 2002 | 0.37 | 2012 | 0.40 |
| 2003 | 0.34 | 2013 | 0.37 |
| 2004 | 0.35 | 2014 | 0.38 |
| 2005 | 0.32 | 2015 | 0.37 |
| 2006 | 0.31 | 2016 | 0.36 |
| 2007 | 0.32 | 2017 | 0.38 |
| 2008 | 0.32 | 2018 | 0.18 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



அட்டவணை 08: அரசியல் உரிமைகள் சுட்டி

| ஆண்டு | அரசியல் உரிமைகள் சுட்டி | ஆண்டு | அரசியல் உரிமைகள் சுட்டி |
|---|---|---|---|
| 2001 | 3 | 2010 | 5 |
| 2002 | 3 | 2011 | 5 |
| 2003 | 3 | 2012 | 5 |
| 2004 | 3 | 2013 | 5 |
| 2005 | 4 | 2014 | 5 |
| 2006 | 4 | 2015 | 4 |
| 2007 | 4 | 2016 | 3 |
| 2008 | 4 | 2017 | 3 |
| 2009 | 4 | 2018 | 3 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



அட்டவணை 09: சிவில் சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | சிவில் சுதந்திரச் சுட்டி | ஆண்டு | சிவில் சுதந்திரச் சுட்டி |
|---|---|---|---|
| 2001 | 4 | 2011 | 4 |
| 2002 | 4 | 2012 | 4 |
| 2003 | 4 | 2013 | 4 |
| 2004 | 3 | 2014 | 5 |
| 2005 | 3 | 2015 | 4 |
| 2006 | 4 | 2016 | 4 |
| 2007 | 4 | 2017 | 4 |
| 2008 | 4 | 2018 | 4 |
| 2009 | 4 | 2019 | 4 |
| 2010 | 4 | 2020 | 4 |

***Source: (The World Bank and The Global Economy Data, 2020)***



அட்டவணை 10: நாடாளுமன்றத்தில் பெண்கள் விகிதம்

| ஆண்டு | நாடாளுமன்றத்தில் பெண்கள் | ஆண்டு | நாடாளுமன்றத்தில் பெண்கள் |
|---|---|---|---|
| 2001 | - | 2011 | 5.78 |
| 2002 | 4.44 | 2012 | 5.78 |
| 2003 | 4.44 | 2013 | 5.78 |
| 2004 | 4.89 | 2014 | 5.78 |
| 2005 | 4.89 | 2015 | 4.89 |
| 2006 | 4.89 | 2016 | 5.78 |
| 2007 | 5.78 | 2017 | 5.78 |
| 2008 | 5.78 | 2018 | 5.78 |
| 2009 | 5.78 | 2019 | 5.33 |
| 2010 | 5.33 | 2020 | - |

*Source: (The World Bank and The Global Economy Data, 2020)*



பொருளியல் துறையின் ஆண்டுச் சஞ்சிகை கூர்மையின்
தொடர்ச்சியான வெளியீட்டுக்கு உங்கள் கருத்துக்களையும்,
விமர்சனங்களையும் தொடர்ந்து வழங்குமாறும்
கேட்டுக்கொள்கின்றேன்………



ஆசிரியர்
கூர்மை
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

தொலைபேசி இலக்கம்: 065 2240735
மின்னஞ்சல்: editorcoormai@gmail.com